Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MARCH 23, 2022

புதன்கிழமை, 23 மார்ச் 2022 | ஒளி: 07 கதிர்: 263 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE




## எரிபொருள் நிலையங்களில் 'ஆமி'



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில், ஒழுங்கான முறையில் எரிபொருள் விநியோகம் செய்யப்படுவதை மேற்பார்வையிட இலங்கை இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பௌசர்கள் மூலம் வழங்கப்படும் எரிபொருள், எரிபொருள் நிரப்பு நிலையங்களால் பொதுமக்களுக்கு ஆகக் கூடுதலாக விநியோகிக்கப்பட்டால் மாத்திரமே இராணுவத்தினர் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் என, இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன, நேற்று (22) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### தேசிய வளங்களை தரைவார்ப்பதற்கான சதிகளுக்கு எதிராக குரல் கொடுக்கத் தயார்

**எல்லே குணவன்ச தேரர், ஜனாதிபதிக்கு கடிதம்**

சொற்பத் தொகை பணத்துக்காக வடக்கு, கிழக்கு மற்றும் நாட்டின் வேறு மாகாணங்களிலுள்ள தேசிய வளங்களை கொள்ளையிடுவதற்கு அல்லது தாரை வார்ப்பதற்கான சதிகள், திட்டங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கு நாம் தயார் என, எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதிக்கு, தேரரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்து சமுத்திரத்தின் கடல் பாதுகாப்பு தொடர்பில், இலங்கை மற்றும் இந்தியா இடையே கைச்சாத்திடப்படவுள்ள 3 ஒப்பந்தங்கள் தொடர்பில், உடனடியாக மக்களுக்கும் பாராளுமன்றத்துக்கும் அம்பலப்படுத்துமாறு எல்லே குணவன்ச தேரர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க மக்கள் ஆணை அவசியம்

## சபையில் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

> **தடுத்து வைக்கப்பட்ட நபர் தனது குடும்பத்தை பார்வையிட முடியும்**

> **தடுத்து வைக்கப்பட்ட நபரின் கருத்தை பெற்றுக்கொள்ள முடியும்**

> **தடுப்புக்காவல் 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களுக்கு குறைத்துள்ளோம்**

பயங்கரவாத தடைச் சட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்கள், மனித உரிமைகள் மற்றும் மனித சுதந்திரத்தை இது உறுதிப்படுத்துகிறது என்று தெரிவித்த வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்றால் அதற்கு மக்கள் ஆணை அவசியம் என்றும் தெரிவித்தார். பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம், பராளுமன்றத்தில் நேற்று (22) இடம்பெற்றது.

அங்கு உரையாற்றியபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது;

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், எவரும் அநாவசியமாக கைதுசெய்யப்படக்கூடாது என ஜனாதிபதி பாதுகாப்பு படைகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

43 ஆண்டுகளாக இப்போதும் இந்தச் சட்டம் நடைமுறையிலுள்ள சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என ஒரு சிலர் கூறுகின்றனர். ஆனால் அதற்கு நீண்ட காலம் எடுக்கும். முதலில் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் மக்களின் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். சட்டத்தை முழுமையாக நீக்குவது என்றாலும் அதற்கு மக்களின் கருத்துகளைக் கேட்க வேண்டும்.

தொடர்ச்சி P2



## டிஜிட்டல் அடையாள அட்டைக்கு ரூ. 300 மில்லியன் ஒப்பந்தம்

இலங்கைக்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் அடையாள அட்டை கட்டமைப்பை நடைமுறைப் படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்திடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

இலங்கைக்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் தனித்துவ சட்டகத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசாங்கம் 300 மில்லியன் இந்திய ரூபாயை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## பாடசாலை மாணவர்களுக்கு நிவாரணங்கள் இல்லை

பா.நிரோஸ்

பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்காக பாடசாலை மாணவர்களுக்கு எந்தவிதமான புதிய நிவாரணங்களையும் அரசாங்கத்தால் வழங்க முடியாதென போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (22) அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான வினாவை முன்வைத்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே, நாட்டில் எரிபொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் பாடசாலை மாணவர்களுக்கான பஸ் கட்டணங்களில் ஏதேனும் நிவாரணத்தை அரசாங்கம் வழங்குமா என கேள்வி எழுப்பினார்.



தொடர்ச்சி P2



## சீதாவக்கையை தூக்கி எறிந்தார் கம்மன்பில

முன்னாள் வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில, சீதாவக்கை பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பதவியை உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இராஜினாமா செய்துள்ளார். அவர் இன்று தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளார். சீதாவக்க பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக என்னை நியமித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என தனது இராஜினாமாக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எரிசக்தி அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதால், நிறைவேற்றுப் பதவியான மேற்கண்ட பதவியில் நீடிப்பது பொருத்தமற்றது என ஜனாதிபதிக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர், வலு சக்தி அமைச்சர் பதவிலியிருந்து பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நீக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




## அமைச்சரின் சாரதி அடித்துக் கொலை

**சந்தேகநபர் சிக்கினார்; இருவர் சரண்**

வலுச்சக்தி அமைச்சர் காமினி லொகுகேவின் சாரதியை மாவித்தரை, கெஸ்பேவ பிரதேசத்திலுள்ள அவரது வீட்டில் வைத்து அடித்துக் கொலை செய்த சந்தேகநபர், நேற்றையதினம் (22) கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## பயங்கரவாதத் தடைச் சட்டம்; உலகத்தின் கண்களை மூடப்பார்க்கிறது அரசாங்கம்

பா.நிரோஸ்

பயங்கரவாதத் தடைச் சட்டம் அரசமைப்புக்கு முரணாகவே கொண்டுவரப்பட்டதாக தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

> **பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களையும் சம்பவங்களை சுட்டிக்காட்டினார்**

பயங்கரவாதத் தடைச் சட்ட விவகாரத்தில் ஒட்டுமொத்த உலகத்தின் கண்களையும் மூடுவதற்கு அரசாங்கம் முயற்சித்தாலும், அதில் வெற்றிப்பெறவில்லை எனவும் தெரிவித்தார். பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

தொடர்ச்சி P2

### மின்சாரம், நீர் கட்டண அதிகரிப்பு

## இன்னும் முடிவில்லை

மகேஸ்வரி விஜயனந்தன்

மின்சாரம், நீர் ஆகிய கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் நேற்று முன்தினம் (22) நடைபெற்ற அமைச்சரவை சந்திப்பில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, ரயில் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பாகவே அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டது என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (22) நடை பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், எதிர்வரும் சில நாள்களுக்குள் சமையல் எரிவாயு தட்டுப்பாடு முழுமையாகத் தீர்க்கப்படும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அவர், இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ள இரண்டு எரிவாயு கப்பல்களை விடுவிப்பதற்குத் தேவையான ஆவணங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஜயந்தவின் வழியை தொடர்ந்தார் லன்சா

கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, தனது இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக, நேற்று (22) அறிவித்தார்.

தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், தான் இராஜினாமா செய்ததற்கான காரணம் தொடர்பில் அவர் எவ்வித கருத்துகளையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தன்னையும் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவையும் சூழ்ந்துள்ள சர்ச்சைகள் தொடர்பிலான விரிவான அறிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் லன்சா, ஜனாதிபதியிடம் அண்மையில் கையளித்திருந்தார்.

முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டிருந்த நிலையில், ஜயந்த சமரவீர தனது இராஜாங்க அமைச்சுப் பதவியை அண்மையில் இராஜினாமாச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## IMF உடன் செயற்படுவது குறித்து பேசப்பட்டது

மகேஸ்வரி விஜயனந்தன்



நாட்டின் தற்போதைய நிதி நெருக்கடி தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து நேற்று முன்தினம் (21) நடைபெற்ற பொருளாதார குழு சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது என, தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படும் போது, தொழில்நுட்ப ஒத்துழைப்பை பெறுவதற்கான முறைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது என்றார்.

தொடர்ச்சி P2

## பயங்கரவாத தடுப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது

**ஆதரவாக 86; எதிராக 35**

பா.நிரோஸ்

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு பாராளுமன்றத்தில் நேற்று (22) நிறைவேற்றப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் 51 மேலதிக வாக்குகளால் இச்சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டது.

அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

இச்சட்டம் மூலத்திற்கு பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன் சட்டமூலம் மீதான விவாதம் நிறைவுற்றதும் எம்.ஏ.சுமந்திரனும் அநுர குமார திஸாநாயக்கவும் ஒன்றாக வாக்கெடுப்பை கோரினார்கள்.

தொடர்ச்சி P2

## சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை

**மேலும் 2 கப்பல்கள் வருவதாக லிட்ரோ அறிவிப்பு**

கொழும்பு துறைமுகத்திலுள்ள எரிவாயு கப்பலிலிருந்து 3,700 மெற்றிக் தொன் எரிவாயு இறக்கப்படுவதாக தெரிவித்துள்ள லிட்ரோ எரிவாயு நிறுவனம், நாட்டுக்கு மேலும் இரண்டு எரிவாயு கப்பல்கள் வருகை தரவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

கெரவலபிட்டிய சேமிப்பு முனையத்தினூடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நேற்றையதினம் (22) ஒரு இலட்சம் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிப்பதற்கு எதிர்பார்ப்பதாக குறித்த எரிவாயு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

நாளொன்றுக்கு ஒரு இலட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்களை தொடர்ச்சியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் லிட்ரோ நிறுவனம் கூறியுள்ளது.

எரிவாயுவை ஏற்றிய மேலும் 2 கப்பல்கள் எதிர்வரும் வியாழன் (24) வெள்ளிக்கிழமைகளில் (25) நாட்டை வந்தடையவுள்ளன என லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

PAGE 1 தொடர்ச்சிகள்

## சதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க தயார்



இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாக இந்தியப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவிடமிருந்து ஒரு பில்லியன் டொலர் கடன் பெறப்பட்ட போது கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் இதுவரை நாட்டுக்கு அறிவிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இலங்கை-சீனா இடையே திடீரென வர்த்தக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாடசாலை மாணவர்களுக்கு நிவாரணங்கள் இல்லை

இதற்குப் பதிலளித்த அமைச்சர் திலும் அமுனுகம, அதிகரிக்கப்பட்டுள்ள டீசல் விலைக்கு நிகராக, பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை. மாறாக குறைந்தளவான கட்டணங்களே அதிகரிக்கப்பட்டுள்ளன. டீசல் விலையோடு ஒப்பிடும்போது, பஸ் கட்டணங்கள் பாரியளவில் அதிகரித்திருக்க வேண்டும் என்றார்.

மேலும், தற்போது புதிதாக எந்தவிதமான நிவாரணங்களையும் அரசாங்கத்தால் வழங்க முடியாது. எதிர்காலத்தில் எரிபொருள் விலைகளில் மாற்றங்கள் ஏற்பட்டால் நிச்சயமாக நிவாரணங்களை வழங்குவோம் எனவும் தெரிவித்தார்.



## IMF உடன் செயற்படுவது குறித்து பேசப்பட்டது



நேற்று (22) அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், நடைபெற்ற பொருளாதார குழுவின் ஆலோசனை குழு என்ற ரீதியில் பிரதான யோசனைகள் சிலவற்றை முன்வைத்துள்ளதாகவும் இதில் குறுகிய கால தீர்வுக்குப் பதிலாக, நீண்டகாலத் தீர்வுக்கான வேலைத்திட்டங்களை முன்வைப்பதே பொருளாதாரக் குழுவின் எண்ணப்பாடாக அமைந்தது என்றார்.

பிரதானமாக தற்போது நிலவும் நிதி நெருக்கடி தொடர்பில், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து, முன்னெடுக்க வேண்டிய கொடுக்கல் வாங்கல் தொடர்பான முறைகள் தொடர்பிலும் அதற்குத் தேவையான முறைமை தொடர்பிலான ஆலோசனைகளை குழு வழங்கியுள்ளது என்றார்.

அதேபோல், கடனை மீளச் செலுத்துதல் தொடர்பான தொழில்நுட்ப காரணங்கள், அணுக வேண்டிய முறைமை குறித்தும் அவர்கள் யோசனையை முன்வைத்துள்ளதாக தெரிவித்தார்.

அதற்கமைய அவர்களின் யோசனைகள், நீண்டகாலத் தீர்வை நோக்கியே அமைவதாகவும் குறுகிய காலப் பிரச்சினைகள் அரசாங்கத்தால் தீர்க்கப்பட வேண்டும். மேலும் இலங்கையின் நீண்ட கால நிதி இருப்பு, அந்நிய செலாவணியை பாதுகாத்தல், வெளிநாட்டு இருப்புகளை நாட்டில் தக்கவைத்தல் உள்ளிட்ட காரணங்கள் மற்றும் கடனை மறுசீரமைக்கும் போது சர்வதேச நாணய நிதியத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்ய வேண்டிய கட்டமைப்பு குறித்தும் ஆலோசனைகள் வழங்குவது, பொருளாதார குழுவின் பிரதான நோக்கமாக காணப்பட்டது என்றார்.

# மக்கள் ஆணை அவசியம்

### சபையில் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

**மனித உரிமைகள், மனித சுதந்திரத்தை இது உறுதி செய்கின்றது**

**மேலோட்டமான திருத்தமென கருத வேண்டாம்; ஆழமான திருத்தமாகும்**

**திருத்தங்களை விமர்சனங்களுக்கு அப்பால் ஆதரிக்க வேண்டும்**

ஆகவே இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தங்களை அரசியல் விமர்சனங்களுக்கு அப்பால் ஆதரிக்க வேண்டும். இப்போதுள்ள திருத்தங்கள் சகலரதும் நலன்களை பாதுகாக்கும். இதற்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்.

பயங்கரவாத தடை சட்டத்தை முழுமையாக திருத்துவதற்கு கால அவகாசம் எடுக்கும். பல்வேறு அரச நிறுவனங்களை இணைத்துக்கொண்டே இதனை செய்தாக வேண்டும். ஆனால் இப்போது அவசரமான திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

இது மேலோட்டமான திருத்தமென கருத வேண்டாம். இது ஆழமான திருத்தமாகும். இந்தத் திருத்தங்கள் தற்போதைய சட்டத்தில் காத்திரமான மாற்றங்களை கொண்டுவரும் என்பதை உறுதியாக கூற முடியும்.

மேலும், மனித உரிமைகள் மற்றும் மனித சுதந்திரத்தை இது உறுதிப்படுத்துகின்றது. அதற்கான அவசியமான மாற்றங்களை இது உள்வாங்கியுள்ளது.

பயங்கரவாத தடை சட்டத்தின் தடுத்துவைப்பு, விசாரணைக்கு உட்படுத்தல், கைதுகள் போன்ற விடயங்களில் முக்கிய மாற்றங்களை கொண்டுவந்துள்ளன.

குறிப்பாக கைதுசெய்யப்பட்ட நபர் அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் நீதிவானிடத்தில் அறிவிக்க வேண்டும். அதேபோல் சித்திரவதைக்கு உட்படுத்தல் தடுக்கப்படும்.

உடல் ரீதியில் மட்டுமல்ல மனதளவிலும் குறித்த நபர் சித்திரவதைக்கு உற்படுதப்பட முடியாது. நீதவான ஒவ்வொரு மாதமும் குறித்த நபர் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

அதேபோல் தடுத்து வைக்கப்பட்ட நபர் அவர் சார்பில் வழக்கறிஞர் ஒருவரை நியமிக்க முடியும், இதற்கு முன்னரும் அதற்கான ஏற்பாடுகள் இருந்தாலும் நிபந்தனைகள் அதிகமாக இருந்தது, எனினும் இப்போது அவ்வாறான நிபந்தனைகள் இல்லை.

அதேபோல் தடுத்து வைக்கப்பட்ட நபர் தனது குடும்பத்தை பார்வையிட முடியும். வாழ்க்கைத்துணையை, பிள்ளைகளை, பெற்றோரை பார்க்க அனுமதி உண்டு. ஆகவே தனிநபர் சுதந்திரம், மனித உரிமைகளை அடிப்படையாக கொண்டு நாம் இவ்வாறான திருத்தங்களை கொண்டு வருகின்றோம்.

அத்துடன் தடுத்து வைக்கப்பட்ட நபரின் கருத்தை பெற்றுக்கொள்ள முடியும், கருத்து சுதந்திரத்துக்கு அமைய அவரது நிலைப்பாடு என்ன என்பதை அறிவிக்க முடியும். அதேபோல் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தடுப்புக்காவல் கால எல்லையை 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களுக்கு குறைத்துள்ளோம். அதேபோல் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் இருந்த 81 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு இன்று சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர் என்றார்.

## அமைச்சரின் சாரதி...

அத்துடன், பிரதான சந்தேகநபரின் தந்தை மற்றும் சகோதரர் ஆகியோர் சரணடைந்துள்ளதாக கல்கிசை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் கமகே நிலந்த தெரிவித்தார்.

கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் காயமடைந்த அவர் தற்போது களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பேச்சாளர் குறிப்பிட்டார்.

சம்பவம் தொடர்பிலான விவரங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

கவனக்குறைவாக வாகனம் ஓட்டியதால் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறில் 41 வயதுடைய சாரதி, நேற்று முன்தினம் (21)




மாலை தனிநபர்கள் குழுவால் கட்டைகளாலும் கூரிய பொருட்களாலும் அடித்துக் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கொலை தொடர்பில் தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரின் தாயும் மேலும் இருவரும் கைது செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## உலகத்தின் கண்களை மூடப்பார்க்கிறது அரசாங்கம்

பயங்கரவாதத் தடைச் சட்டம் வெறும் 6 மாதங்களுக்கு தற்காலிக ஏற்பாடுகளாகக் கொண்டுவரப்பட்ட ஒன்று. ஆனால் தற்காலிகமாக கொண்டுவரப்பட்ட இச்சட்டம் 43 ஆண்டுகளாக இருக்கிறது. அரசமைப்புக்கு அமையவே பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

எனினும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசமைப்புக்கு முரணாகவே அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கம் கொண்டுவந்துள்ளது. இச்சட்டம் கொண்டுவரப்பட்ட முதல் நாளில் இருந்தே தவறாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் அரசாங்கம் தடுப்புக் காவலில் வைத்திருப்பதற்கான காலத்தை 18 மாதங்களில் இருந்து 12ஆகக் குறைத்துள்ளது. இதனால் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படாது எனவும் எடுத்துரைத்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் மக்கள் விடுதலை



**“அரசாங்கம் தடுப்புக் காவலில் வைத்திருப்பதற்கான காலத்தை 18 மாதங்களில் இருந்து 12ஆகக் குறைத்துள்ளது. இதனால் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படாது**

முன்னணியினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போது முஸ்லிம்களை இலக்கு வைத்து இச்சட்டம் பாய்கிறது. இந்த விவகாரத்தில் ஒட்டுமொத்த உலகத்தின் கண்களையும் அரசாங்கம் மூடப்பார்க்கிறது. ஆனால் அதில் அரசாங்கம் வெற்றியடையவில்லை எனவும் கடுமையாக சாடினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களையும், சம்பவங்களை சுட்டிக்காட்டியும் இதன்போது சுமந்திரன் எம்.பி உரையாற்றினார்.

## ‘ஆமி’



இராணுவத்தினர் வேறு எந்த கடமைகளிலும் ஈடுபட மாட்டார்கள் அல்லது தலையிட மாட்டார்கள் என இராணுவ ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

கடந்த சில வாரங்களாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் போதிய அளவு கையிருப்பு இருந்தும் எரிபொருள் விநியோகம் சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை என பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், வன்முறைச் சம்பவங்களும் பதிவாகி வருவதுடன், பொதுமக்களும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

சனிக்கிழமை முதல் கடந்த நான்கு நாள்களில் எரிபொருளைப் பெறுவதற்காக வரிசையில் நின்ற நான்கு பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## டிஜிட்டல் அடையாள அட்டைக்கு ரூ. 300 மில்லியன் ஒப்பந்தம்

குறித்த உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக இருதரப்புக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப் பட்டுள்ளதுடன், குறித்த புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு தொழில்நுட்ப அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## இன்னும் முடிவில்லை

இதேவேளை, கடந்த இரண்டு நாள்களாக நாட்டில் டீசல் தட்டுப்பாடு நிலையை நாம் அறிகின்றோம். ஆனால் நாட்டில் போதுமான அளவு பெட்ரோல் கையிருப்பு காணப்பட்டது. தற்போதும் காணப்படுகின்றது.

இருப்பினும் கடந்த சில நாள்கள் பெட்ரோல் விநியோகிக்கும் சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. அத்துடன், பெட்ரோல் கொள்வனவு செய்வதற்காக நீண்ட வரிசைகளும் காணப்படுகின்றன. நாட்டில் டீசல் தட்டுப்பாடு காணப்பட்டபோதிலும், பெட்ரோல் தட்டுப்பாடு இருக்கவில்லை என்றும், அனைத்து எரிபொருள் நிலையங்களுக்கும் பெட்ரோல் விநியோகிக்கப்பட்டுதாகவும் இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் சிலர் திட்டமிட்டே பெட்ரோலை விநியோகிக்காது பதுக்கி வைத்துள்ளார்கள் என்பது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே பெட்ரோல் விநியோகம் தொடர்பாக கண்காணிப்பதற்கும், முறையான விநியோக பொறிமுறையை ஒழுங்குபடுத்துவதற்குமான உதவியை பெறுவதற்குமாக பாதுகாப்புப் பிரிவை நாடவேண்டியுள்ளது. இது பொதுமக்களின் நன்மைக்காக மேற்கொள்ளப்படுவதே தவிர, மனித உரிமைகளை மீறுவதற்காக அல்ல என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பயங்கரவாத தடுப்பு சட்டமூலம்...

இந்த வாக்கெடுப்பில் எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு,தேசிய மக்கள் சக்தி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியவை எதிர்த்து வாக்களித்தன.

எவ்வாறாயினும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

வாக்கெடுப்பின் முடிவில் பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டுக்கு ஆதரவாக 86 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் செலுத்தப்பட்டன.

இச்சட்ட மூலம் உயர் நீதிமன்ற வியாக்கியானத்துக்கேற்ப திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நேற்று (22) நிறைவேற்றப்பட்டது.

## மூன்றுக்கு மூன்று சொன்னார் பசில்

எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்சாரத் தடைகள் ஆகிய மூன்று பிரச்சினைகளும் இன்னும் இரண்டு தொடக்கம் மூன்று நா ள்களுக்குள் தீர்க்கப்படும் என, கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ள நிலையில், அடுத்தவாரத்தில் பிரச்சினைகள் தீரும் என, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை (21) இரவு இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் எஸ். பி.திஸாநாயக்க தெரிவித்தார்.



ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானிய உதவியுடன்

# புதிய சட்டத்தை கொண்டு வாருங்கள்

பா.நிரோஸ்

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக, புதிய சட்டமொன்றைக் கொண்டுவர வேண்டுமென தெரிவித்த முன்னாள் பிரதமரும் எம்.பியுமான ரணில் விக்கிரமசிங்க, ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியாவிடம் உதவிகளைப் பெற்று, இப்புதிய சட்டம் உருவாக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர், யுத்தம் நிறைவடைந்த பின்னரும், நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் காணப்படுகிறது. இச்சட்டம் போதுமானதா என்கிற கேள்வி காணப்படுகிறது. அதுபோல இச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் கைது செய்யப்பட்ட பலர், 20 வருடங்களாக சிறைச்சாலையில் இருக்கிறார்கள். கடந்த எங்களது அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவருவதற்கு முயற்சித்தது. எனினும் இதனை செய்யமுடியாது போனது.

அமலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் போதுமானதாக இல்லை என ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியாவின் உதவியுடன் பயங்கரவாத ஒழிப்புச் சட்டமொன்றை கொண்டுவர வேண்டும். புதிய சட்டமொன்றை கொண்டுவர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள புலனாய்வாளர்கள் ஒரு சில நேரங்களில் சிறப்பாக செயற்படுகிறார்கள். ஆனால், சில நேரங்களில் அவர்கள் சிறப்பாக செயற்படுவதில்லை. எனவே, பயங்கரவாத செயற்பாடுகளை தடுப்பதற்கு சட்டம் மாத்திரம் போதாது, நுண்ணறிவுகொண்ட புலனாய்வு அமைப்பை உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## நாட்டின் வான் பரப்பைக்கூட விற்பனை செய்கிறார்கள்

பா.நிரோஸ்



நாட்டின் சொத்துகள், வளங்களை எல்லாம் விற்றுத் தீர்த்துவிட்டு தற்போது, நாட்டின் வான் பரப்பைக்கூட விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (22) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டின் வளங்கள், இடங்கள், சொத்துகள் தொடர்பில் நாம் பேசி வருகிறோம். இவ்வாறான நிலையில் நாட்டின் வான் பரப்பை 29 டொலர் மில்லியன்களுக்கு விற்பனை செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் சொத்துகளை விற்பனை செய்து வரும் நிலையில், தற்போது நாட்டின் வான் பரப்பையும் விற்பனை செய்ய முயற்சிக்கிறார்கள். நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை பாராளுமன்றத்துக்கு அழைத்து, இதுபோன்ற விடயங்களில் விளக்கம் பெற வேண்டும் எனவும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

## பயங்கரவாதத் தடைச் சட்டம் நாட்டுக்கே வெட்கம்

### பீரிஸுக்கு யதார்த்தம் தெரியாது எனவும் சாடல்

பா.நிரோஸ்

யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்களுக்கு மேலாகிறது. இவ்வாறான நிலையில் அரசாங்கம் சமர்ப்பித்துள்ள பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலத்தால் நாட்டுக்கு வெட்கம் எனத் தெரிவித்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல, ஒட்டுமொத்த நாட்டு மக்களின் மனித உரிமைகளையும் அரசாங்கம் மீறியுள்ளது என்றார்.

நாட்டு மக்கள் அனைவரும் அத்தியாவசியப் பொருட்களுக்காக வரிசைகளில் நிற்கிறார்கள். இதுவரையில் வரிசைகளில் நால்வர் உயிரிழந்துள்ளனர். இதுவொரு பாரிய மனித உரிமைகள் மீறல் எனவும் மேலும் தெரிவித்தார்.

பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், அரசாங்கம் சமர்ப்பித்துள்ள சட்டமூலம், சட்டமானால் பிடியாணை இல்லாது ஒருவரை கைது செய்யவோ, சந்தேகநபரின் வீட்டுக்கு சென்று சோதனையிடவோ அவரது வாகனங்களை பறிமுதல் செய்யவோ பொலிஸாருக்கு முடியும்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸீக்கு யதார்த்தம் என்னவென்று தெரியாது. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த 7 பேர் இதுவரையில் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பில் என்ன சொல்கிறீர்கள். இதுபோன்ற கொலை எந்தவொரு காலத்திலும் நடந்தது இல்லை. வாக்குமூலத்தை பெற்றுக்கொள்ளும்போது நீதிபதியின் முன்பாகவே வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்களுக்கு மேலாகிறது. இதுபோன்ற நிலையில் இதுபோன்ற சட்டங்களால் நாட்டுக்கு வெட்கம் எனவும் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால்

## தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் பாதிக்கப்படுவார்கள்

### திலீபனை சுட்டிக்காட்டினார் விஜித ஹேரத்



பா.நிரோஸ்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் வடக்கில் உள்ள தமிழர்கள் மாத்திரமல்ல, தெற்கில் சிங்களவர்களும் பாதிக்கப்படுவார்கள் என, தனது உயிரையும் தியாகம் செய்து, யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதமிருந்து உயிரிழந்த திலீபன் அன்றே கூறியதாக, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்கிற காட்டுச் சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டுவருவதால் முழுமையாக அச்சட்டத்தை நீக்க முடியாது. இதில் சில திருத்தங்களை மாத்திரமே அரசாங்கம் கொண்டுவந்துள்ளது.

தங்களுக்கு எதிரானவர்களை அடக்குவதற்கு இச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது. அதற்கு ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் ஓர் உதாரணம் மாத்திரமே.

பயங்கரவாதத் தடைச் சட்டம் வடக்கில் உள்ள தமிழர்களுக்கு மாத்திரமல்ல தெற்கில் உள்ள சிங்களவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒன்று. பாதிப்பை ஏற்படுத்தும் அன்றைய தினமே இது உங்களுக்கு தெரியுமென யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் இருந்து உயிரிழந்த தீலிபன் கூறினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் அனைவரும் பாதிக்கப்படுவார்கள் என தனது உயிரையும் தியாகம் செய்து, திலீபன் கூறினார் எனவும் தெரிவித்தார்.

## புலனாய்வு செயற்பாடுகளால் கலவரங்கள் தடுக்கப்படுகின்றன

பா.நிரோஸ்

கண்டி, திகனவில் நடைபெற்ற கலவரத்துக்குப் பின்னர், அடிப்படைவாதங்களைப் பேசுபவர்கள், பரப்புவர்கள் ஆகியோர் புலனாய்வாளர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு வருவதால், திகன கலவரத்துக்குப் பின்னர் நாட்டில் எந்தவொரு கலவரமும் நடைபெறாது தடுக்கப்பட்டுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (22) அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான வினாவை முன்வைத்து தொடர்ந்து உரையாற்றிய அவர், நான்கு முஸ்லிம்கள் இணைந்து சிங்களவர்களை தாக்கியுள்ளனர். தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்த சிங்களவர் ஒருவர், நான்கு நாள்களின் பின்னர் உயிரிழந்துள்ளதால், சிங்கள மக்கள் ஆத்திரமடைந்து இதைச் செய்துள்ளனர். இது முழுமையாக தவறான ஒன்று.

வீடுகள், வர்த்தக நிலையங்கள் உட்பட 144 இடங்களில் தீவைத்துள்ளனர். இச்சம்பவத்துக்குப் பின்னர் அடிப்படைவாதத்தைப் பரப்புவோர், பேசுவோர் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டு, சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் இதற்குப் பின்னர் இதுபோன்ற சம்பவங்கள் நாட்டில் நடைபெறவில்லை எனவும் தெரிவித்தார்.

## IMFஇன் அறிக்கை எங்கே?

பா.நிரோஸ்

இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக அரசாங்கம் பல தடவைகள் வாக்குறுதிகள் வழங்கியிருந்தபோதிலும் இதுவரையில் அந்த அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை என முன்னாள் பிரதமரும் எம். பியுமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (22) அமர்வில் கலந்துகொண்டு சிறுப்புரிமை மீறல் பிரச்சினையை எழுப்பி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக அரசாங்கம் பாராளுமன்றத்தில் பல தடவைகள் வாக்குறுதி வழங்கியிருந்தது. எனினும் இதுவரையில் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே இது பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறல் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில், நாளைய தினம் (இன்று) சர்வகட்சி மாநாட்டுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் எதுவும் தெரியாது, நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் எவ்வாறு பேசுவது? சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என சபாநாயகர், மத்திய வங்கியின் ஆளுநர், நிதி அமைச்சர் ஆகியோருக்கு அறிவுறுத்த வேண்டும் எனவும் ரணில் கோரிக்கை விடுத்தார்.

## எண்ணெய் குதத்தையும் துறைமுகத்தையும் இந்தியாவுக்கு விற்றுவிட்டார்கள்

### எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



பா.நிரோஸ்

நாடு இருளில் உள்ளது. நிதி அமைச்சர் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பது தெரியவில்லை என குற்றஞ்சுமத்திய எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் எம். பியுமான லக்ஸ்மன் கிரியெல்ல, நாட்டின் துறைமுகமொன்றும், எண்ணெய் குதங்களும் இந்தியாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (22) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டின் நிதி அதிகாரம் பாராளுமன்றத்துக்கே உள்ளது. ஆனால் நாட்டின் நிதி நிலைமைகள் தொடர்பில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸ எதனையும் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கவில்லை என்றார்.





எமது அழகுத்தீவில் இன்னும் அறியப்படாமல் மறைந்து கிடக்கும் பல அற்புதங்கள் ஆயிரம் ஆயிரம் இருப்பது திண்ணம். எனவே அவற்றை தேடிக் கண்டுபிடித்து உலகின் பார்வைக்கு கொண்டு வருவதே இந்தப் பயணத்தின் நோக்கமாகும்.

**இவ்வாறு இலங்கைத் தீவெங்கும் புதைந்து கிடக்கும் அற்புதங்களை உலகறியச் செய்ய நீங்களும் எம்முடன் இணையுங்கள்.**

நம் நாட்டிற்கே உரித்தான விடயங்களை நீங்கள் காணும் பட்சத்தில் அதனை சிறந்த முறையில் புகைப்படமாகவோ அல்லது குறும் வீடியோவாகவோ எடுத்து **www.oitt.lk/ info@oitt.lk** இணையத்தளத்தில் பதிவேற்றுங்கள்.

Cinnamon HOTELS & RESORTS ஏற்பாட்டில்

இணை அனுசரணை: SO SRI LANKA

படைப்பாக்க தொடர்பாடல் அனுசரணை: DentsuGRANT GROUP

Follow us on our pages: /cinnamonhotels /cinnamonhotels /oittsrilanka

the SUNDAY TIMES · DailyFT · DailyMirror · Keells · SriLankan Airlines · SCOPE CINEMAS

சர்வகட்சி மாநாட்டை

# டெலோவும் புறக்கணித்தது

■ வா.கிருஸ்ணா



சர்வகட்சி மாநாட்டை தமிழீழ விடுதலை இயக்கமும் (டெலோ) புறக்கணிப்பதாக அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "சர்வகட்சி மாநாட்டை டெலோ புறக்கணிக்கின்றது. ஏற்கெனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதியிடம் நல்லிணக்க சமிக்ஞையைக் காட்டும்படி கோரிக்கையை முன்வைத்திருக்கின்றோம்.

"தற்போதும் அவ்வாறான நல்லிணக்க சமிக்ஞையைக் காட்டுகின்ற பட்சத்தில், மேற்கொண்டு சிந்திக்கலாம் என்று தெரிவித்திருக்கின்றோம். சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியிருக்கினற இந்தத் தருணத்தில், நாங்கள் அதையும் புறக்கணிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

"வெளிநாடுகளில் பொருளாதார பின்னடைவு நிலைமைகள் ஏற்பட்டால், தலைவர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்வார்கள். இதேபோல், இன்றைக்கு மிகவும் மோசமான பின்னடைவைக் கண்டிருக்கின்ற இந்நாட்டின் தலைவர்கள், இராஜினாமா செய்வதுதான் சாலச் சிறந்தது" என்றார்.

கோவில் நிர்மாண

# சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி

■ தீஷான் அஹமட்

மூதூர், மலையடிப் பிள்ளையார் கோவில் நிர்மாணத்தில் இருந்து வந்த சர்ச்சைக்கு தற்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இக்கோவில் அமைப்பதற்கான காணி, நேற்று (22) காலை வழங்கி வைக்கப்பட்டது.

மூதூர், 64 ஆம் கட்டை மலையடி பகுதியில், பல வருடங்களாக மலையடிப் பிள்ளையார் கோவில் இருந்து வந்தது.

இந்நிலையில், இக் கோவிலை புதிதாகக் கட்டுவதற்கு, மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கம், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் முயற்சித்தது. அப்போது காணிக்கான ஆவணங்கள் இல்லையென மூதூர் பிரதேச செயலாளர், கோவில் நிர்மாணப் பணிகளை தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தினார்.







இதன்பின்னர், ஏற்பட்ட முறுகல் நிலைகளை அடுத்து, பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றிருந்தன.

இந்நிலையில், மூதூர் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூதூர் பிரிவு அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர் உள்ளிட்டோர் நேற்று (22) வருகைதந்து, மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தினர் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடி, காணியை வழங்கி வைத்தனர்.

14 அடி நீளமும் 14 அடி அகலமும் கொண்டதாக மூதூர் மலையடிப் பிள்ளையார் கோவிலை அமைப்பதற்கு காணி கையளிக்கப்பட்டுள்ளதாக ,மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ இ.பாஸ்கரன் குருக்கள் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமைக்கு

# முட்டுக் கொடுத்தவர்களே பதில் சொல்ல வேண்டும்

■ வா.கிருஸ்ணா, எம்.எஸ்.எம்.நூர்தீன்

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள நிலைக்கு முன்னாள் ஆட்சியாளர்களும் அவர்களுக்கு முட்டுக்கொடுத்த தமிழ்த் தலைமைகளுமே மக்களுக்கு பதில் சொல்லவேண்டுமென இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 158 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள், நேற்று முன்தினம் (21) வழங்கப்பட்டன.

இதன்போது உரையாற்றிய இராஜாங்க அமைச்சர், "கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நாங்கள் பல பாடங்களைக் கற்றுள்ளோம். எமக்குத் தேவையானதை நாங்கள் உற்பத்திசெய்ய வேண்டும். நாடு தன்னிறைவு அடையவேண்டுமானால் கிராமங்கள் தன்னிறைவுஅடையவேண்டும்.

"அரசாங்கத்தின் ஒன்றரை வருட ஆட்சிக்காலத்தில்தான், இந்த நாடு பொருளாதார பிரச்சினைக்குள் தள்ளப்பட்டது என்று கூறுவது அடிமுட்டாள்தனமான கருத்தாகும்.

"இந்த நாட்டை மாறிமாறி ஆட்சிசெய்யும் அரசுகள் வெளிநாட்டில் கடன்களைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொண்ட செயற்பாடுகளின் விளைவுதான், இந்த நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினையாகும். பிரச்சினைகள் ஆரம்பிக்கும் காலத்திலேயே விழிப்பாக இருந்திருக்க வேண்டும்.



"இன்று பாணை தூக்கிக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் தொடக்கம் கடந்த ஆட்சிக்காலத்தில் முட்டுக்கொடுத்த தமிழ் தலைமைகளிலிருந்து அனைவரும் நாட்டு மக்களுக்கு பொறுப்பான பதில்களை வழங்கவேண்டும்" என்றார்.

கல்லடி பாலத்தின் கீழிருந்து

# ஆணின் சடலம் மீட்பு

■ வா. கிருஸ்ணா

மட்டக்களப்பு, கல்லடி பாலத்தின் கீழ் ஆண் ஒருவரின் சடலம், நேற்று (22) மீட்கப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலமே, கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இவ்வாறு மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லையெனவும் அவர் தற்கொலை செய்துகொண்டாரா அல்லது கொலை செய்யப்பட்டுள்ளாரா என்பது தொடர்பிலான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



அன்பு இல்லத்தின்

# பொதுக்கூட்டமும் நிர்வாக சபை தெரிவும்

■ ஹஸ்பர்

திருகோணமலை அன்பு இல்ல பொதுச் சபை உறுப்பினர்களுக்கான பொதுக் கூட்டம், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (27) காலை 10 மணிக்கு அன்பு இல்ல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவும் இடம்பெறவுள்ளது.

எனவே, சகல அங்கத்தவர்களும் இப்பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு, அன்பு இல்ல செயற்பாட்டுக்கு உதவுமாறு, அதன் தலைவர் நல்லதம்பி குமணன் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பு விவகாரம்

# சைக்கிள் ஓடாது

## அவர் சிந்தனை இல்லாதவர் என்கிறார் சுகாஷ்

■ வி.நிதர்ஷன்

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி விடுத்துள்ள அழைப்பை தாம் நிராகரிப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அம் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், நேற்று (22) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

'தமிழர் பிரதேசத்தில் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பைத் திட்டமிட்டுத் தீவிரமாகத் தொடர்ந்து கொண்டும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வழங்கும் சிந்தனை அறவேயின்றியும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட்டு வருகின்றார்.

TNPF
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
TAMIL NATIONAL PEOPLE'S FRONT

'நாட்டைப் பொருளாதார ரீதியாக, அதல பாதாளத்துக்குக் கொண்டு சென்றும் மக்களையும் சர்வதேசத்தையும் எதிர்கொள்ள முடியாது, அவர் இன்று சிக்கித் திணறுகின்றார்.

'தான் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைத் திசை திருப்புவதற்காகவும் அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் 23ஆம் திகதி (இன்று) சர்வகட்சி மாநாடு எனும் அரசியல் நாடகத்தை அரங்கேற்றவுள்ளார். இந்தச் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டு, ஜனாதிபதியைக் காப்பாற்றவோ அவருக்கு உயிர் கொடுக்கவோ விரும்பாத காரணத்தால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனாதிபதியின் அழைப்பை நிராகரித்து, சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிப்பது என்ற முடிவை எம் இனம் சார்ந்து எடுத்துள்ளது' என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




மருந்து தட்டுப்பாடு; யாழ். போதனாவில்

# கண் சத்திரசிகிச்சை இடைநிறுத்தம்

■ வி.நிதர்ஷன்

மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக பதில் பணிப்பாளர் மு. நந்தகுமார் தெரிவித்தார்.

கண் சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்பட்டமை தொடர்பாக கேட்டபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பதில் பணிப்பாளர் மேலும் தெரிவிக்கையில், "கண் சத்திர சிகிச்சைக்கான மருந்துப் பொருட்கள் சிலவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. மேலும், சில மருந்துப் பொருட்கள் குறைந்தளவிலேயே உள்ளன. இதனாலேயே சத்திர சிகிச்சைப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

"அத்துடன், மருந்துகளுக்கான கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. அவை எமக்கு கிடைக்கும் பட்சத்தில் மீண்டும் சத்திர சிகிச்சைகள் முன்னெடுக்கப்படும்" என்றார்.




வட மாகாண கல்வி அமைச்சு முன்

# முற்றுகைப் போராட்டம்

■ எம்.றொசாந்த் , வி.நிதர்ஷன்

தமக்கான நிரந்தர நியமனத்தைக்கோரி, வடமாகாண கல்வி அமைச்சு அலுவலகத்தை நேற்று (22) முற்றுகையிட்ட தொண்டர் ஆசிரியர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நல்லூர் - செம்மணி வீதியில் உள்ள வட மாகாண கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக, நேற்றுக் காலை ஒன்றுதிரண்ட தொண்டர் ஆசிரியர்கள், அலுவலக பிரதான வாயிலை முற்றுகையிட்டு போராட்டத்தை முன்னெடுத்தனர். இதனால் அப்பகுதியில் பதட்டம் ஏற்பட்டதுடன், போராட்ட இடத்துக்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.





போதை மாத்திரைகளுடன்

# யாழில் ஒருவர் கைது

■ எம்.றொசாந்த்



யாழ்ப்பாண நகரப் பகுதியில் தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளுடன் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒருவர், நேற்று முன்தினம் (21) கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, இவர் கைது செய்யப்பட்டுள்ளர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து சட்டவிரோத போதை மாத்திரைகள் 3,000 கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

எரிபொருளுக்காக

# வரிசையில் விவசாயிகள்

■ செ.கீதாஞ்சன்

மன்னார் மாவட்டத்தில் விவசாயிகள் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

தற்போது அறுவடைக்காக காத்திருக்கும் விவசாயிகள், உழவு இயந்திரத்துக்குத் தேவையான எரிபொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்குத் தாம் தள்ளப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

உயிலங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு டிசல் கிடைத்துள்ளதைத் தொடர்ந்து, அதைப் பெற்றுக்கொள்வதில் விவசாயிகள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இதில் பலருக்கு ஏமாற்றமே கிட்டியது.

மன்னார் மாவட்டத்தில் 60 சதவீதமான நெல் அறுவடை செய்யப்பட்டுள்ள போதும் 30 சதவீதமான அறுவடை செய்யவுள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். எனினும், 176 ரூபாய்க்கு டீசல் பெறவேண்டியுள்ளது. அதுவும் போதியளவு பெறமுடியவில்லை என விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.



காடுகள் தினம்:

# பாலர் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி வைப்பு




■ எம்.றொசாந்த்

உலக காடுகள் தினத்தை முன்னிட்டு, யாழ்/ விநாயகர் ஞானக்குழந்தை இல்ல பாலர் மாணவர்களுக்கு, எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச்சூழல் கழகத்தால் நேற்று முன்தினம் (21) மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

ஞானக்குழந்தை ஆசிரியர் கா.மதுஷாந்தினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாடசாலை ஆசிரியர்களும் கழக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது, காடுகள் தொடர்பிலும் காட்டு விலங்குகளின் மூலம் மனிதர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் தொடர்பிலும் கழக செயலாளர் சசிகரன், பாலர் மாணவர்களுக்கு கதைகள் மூலம் எடுத்துரைத்தார்.

மக்கள் பட்டினியில் வாடும்போது

# அமைச்சுக்காக பேரம் சாடுகிறார் வேலுகுமார் எம்.பி

"மலையக மக்கள் பட்டினியில் வாடும் நிலைமையிலும், அமைச்சுப் பதவிக்காக பேரம் பேசும் ஆளும் தரப்பே இன்று மலையகத்தில் உள்ளது" என தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிதி செயலாளரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலு குமார் தெரிவித்தார். கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் நீண்ட வரிசைகளில் பொருட்களுக்காக நிற்கும் நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்த நெருக்கடியான சூழ்நிலையில், மலையக தோட்ட தொழிலாளர்களுக்காக முன்னிற்க வேண்டியவர்கள், மலையக மக்கள் பட்டினியில் வாடும் நிலைமையிலும், அமைச்சு பதவிக்காக பேரம் பேசுபவர்களாகவே உள்ளனர்.

இன்றைய அரசாங்கத்தின் ஆரம்பம் முதலே, மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு, அடிக்கு மேல் அடி விழுந்து வருகின்றது. தோட்ட நிர்வாகங்களின் அதிகார துஷ்பிரயோகம் என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது.



மக்கள் ஒரு வேளை உணவையாவது உட்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று மலையக மக்கள் நாளாந்தம் அதிகம் பயன்படுத்தும் கோதுமை மாவுக்கும் மண்ணெண்ணெய்க்கும் பாரிய தட்டுப்பாடு மலையக தோட்ட பிரதேசங்கள் எங்கும் நிலவுகின்றது.

இந்நிலைமைக்கு ஆளும் தரப்பில் இருந்தால் தான் அனைத்தையும் சாதிக்கலாம் எனக் கூறி, எமது மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் பொறுப்பு கூற வேண்டும். ஆனால், மக்களின் இந்நிலைமை தொடர்பாக எந்த வித அக்கறையும் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எமது மக்களின் பிரச்சினைகளை கூறி, பேரம் பேசி, மக்களை காப்பாற்ற வேண்டியவர்கள், இன்று மக்களை நடு ரோட்டில் விட்டுவிட்டு, அமைச்சுப் பதவிக்காக அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

சந்திரிகாமம் தோட்ட முத்துமாரியம்மனின் வருடாந்த

# திருவிழா நாளை ஆரம்பம்

துவாரகஷான்

டயகம, சந்திரிகாமம் தோட்ட அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின், வருடாந்த அலங்கார உற்சவம் சபரிவாசன் ஹரிகர பிரியன் சிவஸ்ரீ பெ. சந்திரகாந்த் குருக்கள் தலைமையில் நாளை (24) ஆரம்பிக்கப்பட்டு 29ஆம் திகதி நிறைவு பெறவுள்ளது.

அந்தவகையில், நாளை காலை வியாழக்கிழமை காலை 5 மணிக்கு விநாயகர் வழிபாடு, வாஸ்து சாந்தி கிராம சாந்தி பிரவேச பலி, புண்ணியாகவாஜனம் இடம்பெற்று கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகும்.

இரண்டாம் நாளான 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை முதல் மாலை வரை கணபதி ஹோமம் மற்றும் விசேட பூஜைகள் நடைபெற்று தொடர்ந்து மாலை 06 மணியளவில் ஆற்றங்கரையில் கரகம் பாலித்தல் நடைபெறும்.

26ஆம் திகதி காலை 08 மணிக்கு சக்தி கணபதி பூஜையுடன் பால் குட பவனி 108 சங்குகளை கொண்டு சங்காபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து வேட்டைத் திருவிழாவுடன் மருத வீரன், அம்மன் ஆகிய சுவாமிகளின் சப்பர திருவிழா உள்வீதி வலம் வரும்.

நான்காம் நாளான 27ஆம் திகதி காலை 7 மணிக்கு கணபதி வழிபாடு, கங்கையில் வேல் பூட்டுதல், தீமிதித்தல், மகேஸ்வர பூஜை, அன்னதானம் வழங்குதல் மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூஜையுடன் பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் கணபதி, வள்ளி, தெய்வானை, முருகப்பெருமான் ஆகிய சுவாமிகள் அலங்கரிக்கப்பட்டு முத்தேர்பவனி நடைபெறும்.

28 திகதி தேர்பவனி கோவிலை வந்தடைந்ததும் பச்சை சாத்துதல் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று மாலை 3 மணிக்கு மாவிளக்கு பூஜை நடைபெறும். திருவிழாவின் இறுதி நாளான 29 திகதி காலை 9 மணிக்கு விசேட பூஜைகள் கோவிலில் இடம்பெற்று, மஞ்சள் நீராட்டு விழாவுடன் கொடியிறக்கம் நடைபெறும். திருவிழா காலத்தில் நடைபெறும் அனைத்து பூஜைகளும் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ சிவகுமார குருக்கள், உற்சவ குரு தலைமையில் இடம்பெறவுள்ளன.

# ரமேஸ்வரன் எம்.பிக்கு புதிய பதவி

ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவராக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக, ரமேஸ்வரன் எம்.பி தனது விசேட ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தின் அபிவிருத்தி குழு தலைவராக செயற்பட்ட ஸ்ரீ லங்கா



பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்க, அமைச்சராக நியமிக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்ட அவரது வெற்றிடத்துக்கே மருதபாண்டி ரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

எனினும், நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில், அந்தப் பதவியை இன்னும் பொறுப்பேற்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ள அவர், எதிர்வரும் நாள்களில் பதவியை பொறுப்பேற்கவுள்ளதாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.






# புனித கெப்ரியல் கல்லூரி தேசிய பாடசாலையானது

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 1,000 தேசிய பாடசாலைகள் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைய, ஹட்டன், புனித கெப்ரியல் மகளிர் கல்லூரி, தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. இந்த நிகழ்வில், மத்திய மாகாண பிரதான செயலாளர் காமினி ராஜரட்ண, அம்பகமுவ பிரதேச சபையின் தவிசாளர் ஜயசங்க பெரேரா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(சுதத். எச்.எம். ஹேவா)



நுவரெலியாவில் பேக்கரி உடைத்து

# பாண் திருட்டு

டி.சந்ரு

நுவரெலியா பிரதான தபால் நிலையத்துக்கு முன்பாகவுள்ள, பேக்கரி உடைக்கப்பட்டு, அங்கிருந்த பாண் மற்றும் பணம் திருடப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் (20) இரவு இடம்பெற்றுள்ளது.

பேக்கரியின் பின்புறமாகவுள்ள ஜன்னலை உடைத்து, உள்ளே புகுந்த திருடர்கள் கைவரிசையை காட்டியுள்ளனர். பாண் மற்றும் 40 ஆயிரம் ரூபாய் பணத்தை இவ்வாறு திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

நுவரெலியாவில் கடந்த சில மாதங்களில் தொடர்ந்து இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் பதிவாகிய வண்ணம் உள்ளன. எனினும், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்விப்புரட்சி மூலம் நுவரெலியா மாவட்டத்தில்

# மாற்றத்தை ஏற்படுத்த முடியும்

எஸ்.கணேசன்

"கல்விப்புரட்சி மூலம் நுவரெலியா மாவட்டத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். எனவே, இம்மாவட்டத்தில் வாழும் மாணவர்கள், கல்வித்துறையில் வெற்றிநடைபோட என்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் அள்ளி வழங்குவேன்" என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா மாவட்ட பிரதம அமைப்பாளர் திருமுருகன் தெரிவித்தார்.

கொட்டகலை, மேபீல்ட் தோட்டம், சாமஸ் பிரிவு, வட்டவளை, மவுன்ஜீன் தோட்டம், கடவளை தோட்டம் ஆகிய பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே, திருமுகன்



மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"விஷ்ணு ஆரோவணம் எனும் அரச சார்பற்ற நிறுவனம், 2017 ஆம் ஆண்டு என்னால் தொடங்கப்பட்டது. அன்று முதல் சமூகசேவையும் ஆரம்பமானது. குறிப்பாக, பல்கலைக்கழகம் தெரிவாகி, வறுமையால் கல்வியைத் தொடர முடியாமல் இருந்த சுமார் 120 மாணவர்களுக்கு மாதம் ஆறாயிரம் ரூபாய் புலமைப்பரிசில் வழங்க நடவடிக்கை எடுத்தேன். இனியும் அந்த சேவை தொடரும். கல்விக் கண் திறப்பதற்கு என்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் வழங்கிவருகின்றேன்.

எனது சேவையைப் பாராட்டி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா மாவட்ட பிரதம அமைப்பாளர் பதவியை, கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன எனக்கு வழங்கியுள்ளார். இந்தப் பொறுப்பையும் நான் மக்களுக்காகவே பயன்படுத்துவேன்.

"நுவரெலியா மாவட்டத்தில் வாழும் சிறார்களுக்கான சத்துணவு திட்டத்தையும் ஆரம்பித்துள்ளேன். சிறார்களின் மூளை வளர்ச்சிக்கு, புரதம் உள்ளிட்ட சத்துணவுகள் அவசியம். அவை இப்பகுதிகளில் உரிய வகையில் வழங்கப்படுவதில்லை. இந்நிலைமையை மாற்றியமைக்கவே மேற்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது" என்றார்.

# சிறுத்தை குடும்பத்தால் திக்குமுக்கு

ரஞ்சித் ராஜபக்ஷ

நோர்வூட், போற்றி தோட்டப் பாடசாலைக்கு அருகிலுள்ள மரமொன்றில் சிறுத்தையொன்று தனது இரண்டு குட்டிகளுடன் ஏறியதால், மாணவர்களும் ஆசிரியர்களும் பீதியடைந்தனர்.

போற்றி தோட்டத்தில் உலாவித் திரியும் குறித்த சிறுத்தை, தனது குட்டிகளுடன் இரை தேடி வந்து, அங்கிருந்த நாய்களை வேட்டையாட முயற்சித்துள்ளது. எனினும் இதன்போது அங்கிருந்த தொழிலாளர்கள் கூக்குரலிட்டதால், குறித்த சிறுத்தை குட்டிகளுடன் பாடசாலைக்கு அருகிலிருந்த மரத்தின் மீது ஏறியுள்ளது.

இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பில் நல்லதண்ணி வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு நோர்வூட் பொலிஸார் அறிவித்தனர். சம்பவ இடத்துக்கு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வருகைதந்து குட்டிகளுடன் சிறுத்தையை தேயிலைத் தோட்டத்துக்குள் துரத்தியுள்ளனர்.

அத்துடன் போற்றி தோட்டத்தில் உலாவும் இந்தச் சிறுத்தையை காட்டுக்குள் துரத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் தொழிலாளர்களிடம் அதிகாரிகள் உறுதி வழங்கியுள்ளனர்.

# மொனராகலைக்கு 15 தீயணைப்பு வாகனங்கள்

## வழங்கி வைக்கப்பட்டன

சுமணசிறி குணதிலக

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு ஊடாக, உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தீயணைப்பு வாகனங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு, மொனராகலை பிரதேச சபையில் நடைபெற்றது.

ஒஸ்ட்ரியா அரசின் நிதியுதவியின் கீழ், 2,979 மில்லியன் ரூபாய் நிதிசெலவில் 15 தீயணைப்பு வாகனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், மொனராகலை பிரதேச சபை தவிசாளர் ஆர். டிஎம் ரத்னவீரவிடம் வாகனங்களுக்கான திறப்புகளை கையளித்தார்.



மவுசாகலை வட்டாரத்தில்

# எதிர்ப்பதற்கு முன்னாயத்தம்

செ. தி. பெருமாள்

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்வரும் மூன்றாம் திகதி தலவாக்கலை நகரில் நடைபெறவுள்ள பேரணி தொடர்பான முன்னாயத்த கூட்டம் மவுசாகலை வட்டாரத்தில் நேற்றைய (22) தினம் நடைபெற்றது.

மவுசாகலை வட்டாரத்தில் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இக்கூட்டம் நடைபெற்றது.

அதாவது லெமன்மோறா, ஹப்புகஸ்தென்ன மே/பி, ஹப்புகஸ்தென்ன கீ/பி, லக்கம் பிறைவட், லக்கம் கம்பனி, நைன்ஷா கீ/பி, நைன்ஷா மே/பி, சீட்டன், மவுசாகலை ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய தோட்டத் தலைவர்கள் தலைவிகள்



மற்றும் முக்கியஸ்தர்களுக்கான தெளிவூட்டல் கூட்டமே இதன்போது நடைபெற்றது.

எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்கும் பொதுமக்களை நெறிப்படுத்தும் நோக்கில், தொ.தே.சங்கத்தின் தேசிய அமைப்பாளர் கணபதி நகுலேஸ்வரன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



# பிரதேச மக்களால் புனரமைக்கப்பட்ட வீதி

மொஹொமட் ஆஸிக்

கடந்த பல வருடங்களாக திருத்தப்படாமல் இருந்த, பாத்ததும்பறைப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மடவளை பஸார் தொலைபேசிக் கோபுர வீதியை (டவர் லேன்) பிரதேச மக்கள் ஒன்றிணைந்து புனரமைப்பு செய்தனர்.

அண்மையில் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து, சுமார் 8 இலட்ச ரூபாய்க்கும் அதிகமான நிதி செலவில், சுமார் 200 மீட்டர் தூரம் வரை புனரமைப்புச் செய்தனர்.

கேகாலையில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பில்

# தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம்

என்.ஆராச்சி

2022ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பில், கேகாலை மாவட்ட சிவில் அமைப்புகளை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம், இன்று (23) கேகாலையில் நடைபெறவுள்ளது.

கேகாலை, ரந்தெனியவில் உள்ள சர்வதோய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது என, சர்வோதய அமைப்பின் கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிரியந்த பியதிலக தெரிவித்துள்ளார்.

குறித்த வேலைத்திட்டமானது, இன்று காலை 9 மணியிலிருந்து பகல் 1.30 மணிவரை நடைபெறவுள்ளதுடன், இதில் பல்வேறு சிவில் அமைப்புகளைச் சேர்ந்த 50 பேரைக் கொண்ட குழுவினர் பங்கு பற்றவுள்ளனர் என்றார்.

இவர்களுக்கான தெளிவுப்படுத்தல் நடவடிக்கைக்காக கேகாலை உதவி தேர்தல் ஆணையாளர் சஜித் கஸ்தூரிசிங்க, பெப்ரல் அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் சுஜீவ கயனாத் உள்ளிட்டவர்கள் வளவாளர்களாக கலந்துகொள்வர். பெப்ரல் அமைப்பு அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முட்டாள்தனமான முடிவை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும்

அரசாங்கத்தை வழிநடத்த வேண்டிய எதிர்க்கட்சிகள், தமது வகிபாகத்தைச் செய்கின்றனவா எனக் கேட்குமளவுக்கு இருக்கின்றன அவற்றின் நடவடிக்கைகள். மக்கள் கொதித்தெழுந்துள்ளனர்; இன, மத, மொழி பேதங்களை மறந்து, ஓரணியில் திரண்டுள்ளனர். பொலிஸாருடன் மோதிக்கொள்ளும் அளவுக்கு, நிலைமை உக்கிரமடைந்துவிட்டது.

வடக்கு, கிழக்கில் உரிமைக்கான போராட்டமும் தென்னிலங்கையில் உணவுக்கான போராட்டமும் முன்னெடுக்கப்படுகின்றன. வடக்கு, கிழக்கு போராட்டங்களை ‘இரும்பு சப்பாத்துகள்’ கொண்டு அடங்கியாளும் அரசாங்கம், தென்னிலங்கையிலும் இராணுவத்தை இறக்கியுள்ளது. அந்தளவுக்கு நிலைமை உக்கிரமடைந்துள்ளது.

அரசியலை பொறுத்தவரையில், தேர்தல் முக்கியமானது. நாடு தற்போதிருக்கும் நிலைமையில், எந்தவொரு தேர்தலுக்கும் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்ததைப் போல, தேர்தல்கள் ஒத்திவைக்கப்படக்கூடும். ஆதலால், மக்கள் மீது அனுதாபம் காட்டவேண்டிய எந்தவொரு தேவையும் ஆட்சியாளர்களுக்கு கிடையாது.

தேர்தலுக்குச் செல்லவேண்டிய நேரத்தில் நிவாரணங்களை வாரிவழங்கி, மக்கள் மனங்களை வென்றெடுக்கும் தூண்டிலை போட்டுவிடுவார்கள். ‘மறதிப்புத்தி’ இருப்பதால், ‘பழைய குருடி கதவைத் திறவடி’ என்பதாக மீண்டும் ஆட்சிப்பீடம் ஏற்றிக்கொள்வர். அரசியலமைப்பில் ஏதாவது திருத்தங்களை மேற்கொண்டு, நீண்டகால ஆட்சிக்கு வித்திட்டுக்கொள்வர். அதற்குப்பின்னர் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக வீதிக்கு இறங்குவர். நிலைமை கைமீறிப் போய்விடுமாயின், படையினர் களத்தில் இறக்கிவிடப்படுவர்.

தற்போதையை சூழ்நிலையில், எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்வரசாங்கத்தை பொறுத்தவரையில் எதற்கெடுத்தாலும் இராணுவத்தை இறங்கிவிட்டுவிடுகின்றது. அதனால், சர்வதேச ரீதியில் தன்பெயரைக் கெடுத்துக்கொள்கிறது. மனித உரிமைகள் தொடர்பான ஸ்தாபனங்கள் கடுமையான கண்டங்களையும் தெரிவித்துவருகின்றன.

நெருக்கடி நிலைமைகளின் போதெல்லாம், இராணுவத்தை களமிறக்குவது முட்டாள்தனமான தீர்மானமாகும். முறையான நிர்வாகம் இருக்குமாயின், நெருக்கடி இந்தளவுக்கு நீண்டு சென்றிருக்காது. இன்று (23) அழைக்கப்பட்டிருக்கும் சர்வகட்சி மாநாட்டுக்குக்கூட ஆளும் கட்சியிலிருக்கும் பயங்காளிகளே செல்வதில்லை எனத் தீர்மானித்துவிட்டனர்.

“கேட்கிற ஆளா இருந்தால், போய்ப் பேசலாம். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என நினைத்து கொண்டிருப்போரிடம் எதையும் பேசிப் பயனில்லை” என பலரும் வெளிப்படையாகவே கூறத்தொடங்கி விட்டனர். தவறுகள் விடுவது மனித இயல்பு; ஆனால், தவறுகள் சுட்டிக்காட்டப்படும் போது, அதன் இருபக்கங்களையும் ஆராய்ந்து பார்த்து, தீர்மானங்களை எடுப்பதே புத்திசாலித்தனம்.

ஆனால், எதற்கெடுத்தாலும் படையினரை களத்தில் இறக்குவது நல்ல தீர்மானம் இல்லை. மக்கள் கொதித்திருக்கின்றனர். இந்நிலையில், படையினருடன் முரண்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். அது பாரிய விபரீதங்களுக்கு வழிசமைத்து கரும்புள்ளியாகிவிடும். ஆகையால், முட்டாள்தனமான தீர்மானத்தை, மீளப்பெறச் சிந்திப்பது நல்லது. அதேபோல, முறையான நிர்வாக கட்டமைப்பை ஏற்படுத்தி, எரிபொருள் விநியோகத்தை சீர்செய்ய முயல்வது அதனிலும் மேலானது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம

சோகத்தின் போது, தனிமையுடன் இணையலாகாது. இந்நிலை உங்களது உள்ளத்தை மேன்மேலும் வாட்டும். உங்களுக்குப் பிடித்தவர்களுடன் மனம்விட்டு உரையாடுதல் நல்லது.

நல்ல இசை, துன்பங்களைத் துடைத்தெறியும். எது உங்களுக்கு பிடித்தமான பொழுதுபோக்கோ அதை நாடலாம்.

எக்காரணத்துக்காகவும் மதுப்பாவனை கூடவே கூடாது. துன்பம் வந்தால் மதுஅருந்துவது, தேகத்தையும் அறிவையும் மேன்மேலும் முடக்கிவிடுகின்றது.

திரைப்படங்களில் காதல் தோல்வி என்றால், நாயகன் போதை தரும் பானங்களை அருந்தும் காட்சி அடிக்கடி வருகின்றன. போதையால் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டவர்கள் உலகத்தில் எவர் இருக்கிறார்கள்?

மனம் உறுதிபட வேண்டிய நேரத்தில், அதை முடக்கும் செயலை நாடுவது கோழைத்தனமும் தன்னைத்தான் வருத்தும் நிலையுமாகும். குடிகாரன் என்னும் பெயர் அவமானத்துக்குரியது.

வெட்டப்பட வேண்டிய எந்தத் துன்பங்களும் அறிவால் வெட்டப்பட வேண்டும். கலகலப்பாக என்றும் இருங்கள்; துன்பம் ஒட்டாது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# எதிர்க்கட்சிகள் பதவிக்கு வந்தால் பிரச்சினைகள் தீருமா?



எம்.எஸ்.எம். ஐயூப்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புதன்கிழமை (16) நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது, “தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு நாம் பொறுப்பல்ல” எனக் கூறினார். அதேவேளை, “இந்த நெருக்கடிகளைத் தோற்றுவித்த காரணிகளில் சில, எமது கட்டுப்பாடுக்கு அப்பாலானவை” என்றும் கூறினார்.

ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு, கடந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களின் போது வாக்களித்த மக்களின், அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கை சின்னாபின்னமாகி இருக்கும் நிலையில், அந்த நம்பிக்கையை மீண்டும் கட்டி எழுப்புவதே ஜனாதிபதியின் உரையின் நோக்கமாகத் தெரிந்தது. ஆனால், அந்த முயற்சி பயனளிக்கவில்லை.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு, வெளிநாட்டு செலாவணித் தட்டுப்பாடே பிரதான காரணம் என்ற ஜனாதிபதி, தற்போது நிலைமை சீராகி வருவதாக புள்ளி விவரங்களை முன்வைத்தார். எனினும், பில்லியன் டொலர் கணக்கிலேயே அவர் அதை விவரித்தார். ஒரு பில்லியன் டொலர் என்றால் எவ்வளவு, அந்தத் தொகையால் என்ன செய்யலாம் என்பதை அறிந்த எத்தனைப் பேர், இந்த நாட்டில் இருக்கிறார்கள்?

பொதுஜன பெரமுன, 2022 பெப்ரவரி மாதம் ஒன்பதாம் திகதி அநுராதபுரத்தில் நடத்திய பொதுக் கூட்டமொன்றில், பெரமுனவின் தலைவர்கள் உரையாற்றும் போதும், இவ்வாறு நம்பிக்கையைக் கட்டி எழுப்ப முயன்றனர். எனினும், அந்தக் கூட்டத்தில் இருந்து வீடு திரும்பிய உடனேயே, மக்கள் மீண்டும் எரிபொருளுக்காகவும் எரிவாயுவுக்காகவும் நீண்ட வரிசைகளில் நிற்க நேர்ந்ததை அடுத்து, அந்தக் நோக்கமும் நிறைவேறவில்லை.

“தற்போதைய பிரச்சினைகள் தானாக உருவாக்கியவை அல்ல” என்று கூறும் போது, அவற்றைத் தீர்க்கும் பொறுப்பும் தமக்கில்லை என்று கூற ஜனாதிபதி முயல்கிறார் போலும். அவருக்கோ, தற்போதைய அரசாங்கத்தின் எந்தவொரு தலைவருக்கோ, அவ்வாறு பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது.

தற்போதைய பிரச்சினைகளுக்கு, தற்போதைய அரசாங்கம் மட்டுமே காரணம் என்றும் எவரும் வாதிடவும் முடியாது. அதேவேளை, தற்போதைய பிரச்சினைகளுக்கான சில காரணங்கள், தற்போதைய அரச தலைவர்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாலானவை என்பதும் உண்மை. எனினும், அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பிலிருந்து நழுவிவிட, அரசாங்கத்தின் எந்தவொரு தலைவராலும் முடியாது.

ஜனாதிபதி கூறியதைப் போலவே, தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான பிரதான காரணம், வெளிநாட்டு செலாவணித் தட்டுப்பாடாகும். வெளிநாட்டு செலாவணிக் கையிருப்பைப் பலப்படுத்துவதானால், செலாவணி வெளியேறுவதைத் தடுப்பதோடு, வெளியிலிருந்து செலாவணி உள்ளே வரும் வழிகளைப் பலப்படுத்த வேண்டும். வெளிநாடுகளிலிருந்து செலாவணி உள்ளே வருவதற்காக வெளிநாடுகளுக்குத் தேவையான பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்திச் செய்ய வேண்டும். அதாவது இந்த இரண்டுக்கும் தேசிய உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

ஆங்கிலேயர் காலத்திலிருந்து வரும் பெருந்தோட்ட வருமானமும் 1980களில் உருவான வெளிநாட்டுத் தொழில், ஆடைத் தொழில் ஆகியவற்றின் வருமானமும் தான் இலங்கைக்கு பிரதானமாக வெளிநாட்டு செலாவணியாக கிடைக்கிறது. பிற்காலத்தில் உல்லாச பிரயாணத்துறையும் பிரதான வருமானமாகியது. இலங்கையில் இருந்த உருக்கு, நெசவு, சீனி, ஒட்டுப்பலகை, சீமெந்து போன்ற தொழிற்சாலைகளையும் ஆட்சியாளர்கள் அடிக்கடி விற்றுவிட்டார்கள்.

இப்போது, நாட்டுக்கு தேவையான அனைத்தும் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. கடந்த காலங்களிலும் அதற்குப் போதுமான வெளிநாட்டுப் பணம் நாட்டில் இருக்கவில்லை. ஆகவே, சகல அரசாங்கங்களும் வெளிநாட்டுக் கடன் பெற்று, இதுவரை காலமும் நாட்டுக்கு அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்து கடனை ஏற்றி வைத்தன.

கடந்த வாரம் அரசாங்கம் இந்தியாவிடமிருந்து 100 கோடி டொலர் கடனைப் பெற்றது. சீனாவிடமிருந்தும் மேலும் 200 கோடி டொலருக்கு அதிகமான கடனை அரசாங்கம் கேட்டுள்ளது. அந்தப் பணம் முடிவடையும் போது, கடனும் மேலும் ஏறியிருக்கும். மீண்டும் கடன் பெற வேண்டிய நிலையும் உருவாகும். அப்போது எங்கிருந்து கடன் பெறுவது?

அத்தோடு, கொவிட்-19 நோயின் காரணமாக உல்லாசப் பிரயாணத்துறையும் வெளிநாட்டுத் தொழிற்றுறையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. அது எந்தவோர் அரசாங்கத்தினதும் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிலைமையாகும்.

எனவே, வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினைக்கு, தாம் காரணமல்ல என்று ஜனாதிபதி கூறும் போது அது ஓரளவுக்கு உண்மையே. ஆனால் அவரும் அவரது சகோதரரும், நாட்டை ஆட்சி புரிந்த 2005 - 2014 வரையிலான ஒன்பது வருட காலத்திலாவது தேசிய உற்பத்தியை பெருக்க, அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்தவகையில் தற்போதைய பிரச்சினைகளுக்கு ராஜபக்ஷர்களுக்குப் பெரும் பங்குண்டு.

அதேவேளை, தற்போதைய படுபயங்கரமான விலை ஏற்றத்துக்கு, வெளிநாட்டு செலாவணிப் பற்றாக்குறைக்கு புறம்பாக, தற்போதைய அரசாங்கத்தின் தலைவர்கள் அரசியல் கண்ணோட்டத்தில் எடுத்த சில நடவடிக்கைகளும், இந்தக் காலகட்டத்தில் இடம்பெற்ற பாரிய ஊழல்களும் முக்கிய காரணங்களாகும்.

கோட்டாபய ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர், அரசாங்கம் ஒன்றரை ரில்லியன் (150,000 கோடி) ரூபாய்க்கு மேற்பட்ட பெறுமதியான நாணய நோட்டுகளை அச்சிட்டுள்ளது. பணத்தை அச்சிட்டு, புழக்கத்துக்கு விட்டால் பணவீக்கம் ஏற்படும்; விலைவாசிகள் உயரும் என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

இதில் விந்தை என்னவென்றால், இதைவிட அதிகமான வருமானத்தை, அரசாங்கம் 2019ஆம் ஆண்டு அறிவித்த பல்வேறு வரிச் சலுகைகள் மூலம், கடந்த இரண்டு ஆண்டுகளில் இழந்தது என்பதாகும். 2020ஆம் ஆண்டு, பொதுத் தேர்தலை இலக்காக வைத்தே, கோட்டாபயவின் அரசாங்கம் இந்த வரிச் சலுகைகளை அறிவித்தது.

அதேபோல், 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம், அரசாங்கம் சீனிக்கு விதித்து இருந்த கிலோ கிராமுக்கு 50 ரூபாய் வீதமான இறக்குமதி வரியை, 25 சதமாகக் குறைத்தது. சீனியின் விலையைக் குறைக்கவே இவ்வாறு செய்வதாக அப்போது கூறப்பட்டது. எனினும், வரிச் சலுகைளைப் பெற்றுக் கொண்ட வர்த்தகர்கள், சீனியின் விலையை குறைக்கவில்லை. அரசாங்கம் அவர்களுக்கு எதிராக, எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவும் இல்லை.

இது பாரியதோர் ஊழலாகும். இதன் மூலமும் அரசாங்கம் பல பில்லியன் ரூபாய் வருமானத்தை இழந்தது. அந்த வரிச் சலுகைகளை அறிவிக்காமல் இருந்திருந்தால், அரசாங்கம் பணம் அச்சிடத் தேவையில்லை. அந்த வகையில், தற்போதைய விலைவாசி உயர்வுக்கு, தற்போதைய அரசாங்கம் பெரும் பங்காற்றியுள்ளது.

அரசாங்கம் இராஜினாமாச் செய்ய வேண்டும் என, இப்போது எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி, கடந்த 15ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தி, கொழும்பில் பாரியதோர் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

மக்கள் விடுதலை முன்னணியின் இளைஞர் அணியான சோஷலிஸ இளைஞர் சங்கமும் வெள்ளிக்கிழமை (18) ஜனாதிபதி அலுவலகத்தின் முன்னால் பாரியதோர் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கும் வரிசையில் நிற்கும் மக்களும் அரசாங்கத்துக்கு சாபமிடுகிறார்கள். “வெளியேறிப் போங்கள்” என்கிறார்கள்.

பிரச்சினை என்னவென்றால், தற்போதைய பிரச்சினைகளுக்கு எந்தக் கட்சியிடமும் தீர்வு இல்லாமையாகும். தற்போதைய அரசாங்கம் இராஜினாமாச் செய்தால், சிலவேளை சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வரலாம். அவர்கள், எவ்வாறு தற்போதைய வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினையை தீர்க்கப் போகிறார்கள் என்பது தெளிவில்லை.

வெளிநாட்டுக் கடனை ஒத்திப்போட பேச்சுவார்த்தை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. அது வெற்றியடைந்தாலும், அந்தக் கடனையும் எப்போதாவது திருப்பிச் செலுத்த வேண்டும்; உணவுக்காகவும் மருந்துக்காவும் பணம் தேடவும் வேண்டும். அதற்கு என்ன வழி?

தமக்கு உதவியளிக்க சில நாடுகள் தயாராக இருப்பதாக சஜித் கூறுகிறார். இலவசமாக, மற்றைய நாடுகளுக்கு பணத்தை அள்ளிக் கொடுக்கும் நாடுகள் இல்லை. அவ்வாறு உதவி செய்ய நாடுகள் இருந்தாலும், அந்த உதவிகளைப் பாவித்து சொந்தக் காலில் நிற்கக் கூடிய வகையில் நாட்டை அபிவிருத்தி செய்ய அவரிடம் திட்டம் ஏதும் இருக்கிறதா?

தாம் பதவிக்கு வந்தால், பில்லியன் கணக்கில் இடம்பெறும் ஊழல்களை நிறுத்துவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் கூறுகின்றனர். அது நல்ல யோசனைத் தான். ஆனால், உடனடிப் பிரச்சினையான வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினையை தீர்ப்பது எவ்வாறு? பொதுவாக, நாட்டில் எந்தவொரு கட்சியிடமும் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வில்லை.

## கடிதங்கள்

### பிச்சைவெளியில் நெல் அறுவடை பாதிப்பு

திருகோணமலை, தம்பலகமம் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பிச்சவெளி பகுதியில் செய்கை பண்ணப்பட்ட பெரும் போக வேளாண்மை அறுவடை, டீசல் இல்லாத காரணத்தால், பெரும் துன்பப்பட்டு வருவதாகவும், விவசாயிகளே தங்களுடைய வேளாண்மையை அறுவடை செய்ய, டீசல் வாங்கிக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தம்பலகமம் பிச்சவெளி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சேதனப் பசளையைப் பயன்படுத்தி செய்கை பண்ணப்பட்ட வேளாண்மையே இவ்வாறு அறுவடை செய்யப்படுகின்றது. சேதனப் பசளையால் விளைச்சல் இல்லை; விளைந்த வேளாண்மையை அறுவடை செய்ய டீசல் இல்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பிச்சவெளி பகுதியில் சுமார் 610 ஏக்கர் நிலப் பரப்பில், 220 விவசாயிகள் பெரும்போக வேளாண்மை செய்கையில் ஈடுபட்டனர். ஏக்கருக்கு 10 -15 மூடைகளே நெல் விளைந்துள்ளது. யூரியா பசளை மூலமாக, கடந்த காலங்களில் 40-45 மூடைகள் விளைச்சல் கிடைத்தன. இம்முறை பாரியளவில் நட்டம் ஏற்பட்டுள்ளது. வங்கியில் கடன்பட்டுத் தான் விவசாயம் செய்தோம்.

நெல் சந்தைப்படுத்த முடியாது. வேறு இடங்களிலுள்ள நெல்லைக் கொண்டு வந்து எங்களுடைய கபடாவை நிரப்பி விட்டார்கள். 7,000 ரூபாய்க்கு முன்னர் அறுவடை செய்த நாங்கள், இப்போது 10,000/= கொடுத்து அறுவடை செய்ய வேண்டியுள்ளது என விவசாயிகள் விசனம் தெரிவித்தார்கள்.

ஹஸ்பர்



# அமைச்சரவை தீர்மானங்கள் சில..

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்றுமுன்தினம் (21) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில..




### 01. முதலீட்டு ஊக்குவிப்புகள் தொடர்பான அமைச்சரவைக் குழு

அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக, தேசிய ரீதியாக முன்னுரிமையளிக்கப்படும் துறைகளை அடையாளங்கண்டு, அதற்கு ஏற்புடைய துறைகளில் முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்குத் தேவையான கொள்கை ரீதியானதும், நடைமுறை சாத்தியமானதுமான தீர்வுகளை வழங்குமுகமாக 'முதலீட்டு ஊக்குவிப்புகள் தொடர்பான அமைச்சரவைக் குழு'வை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கிகாரம்.

### 02. புத்தாக்க முறைமையை பலப்படுத்தல்

இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஒத்துழைப்புடன் 2018ஆம் ஆண்டில் தெற்காசியாவில் முன்னணி சமூக ஆராய்ச்சி நிறுவனமான 'சிற்றா ( Citra ) நிறுவனம்' தாபிக்கப்பட்டுள்ளது. 'சிற்றா' புத்தாக்க ஆராய்ச்சி நிறுவனம், கடந்த காலங்களில் அரச, அரச சார்பற்ற பங்காளர்களுடன் ஒத்துழைப்புடன் செயலாற்றி, குறிப்பிடத்தக்க பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

'சிற்றா' புத்தாக்க ஆராய்ச்சி நிறுவனம், உலகில் ஏனைய நாடுகளைப் போலவே பிரதமர் அலுவலகத்தின் நேரடி வழிகாட்டல், ஒருங்கிணைப்பின் கீழ் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் கருத்திட்டமாக தொடர்ந்தும் மேற்கொண்டு செல்வதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 03. ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்

அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் 2017ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கமைய, எமது நாட்டில் சுற்றுலாத்துறையின் பெறுமதி சேர்க்கைகளை மேம்படுத்துவதற்காகவும், சுற்றுலாத்துறையில் தொழில் முயற்சிகளை அதிகரிப்பதையும் நோக்காகக் கொண்டு, அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உதவித்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள 15 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியனுசரணையின் 'உள்ளடக்கப் பொருளாதார விருத்திக்கான திறன்கள்' (Skills for Inclusive Growth – S4IG) கருத்திட்டம் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை போன்ற மாவட்டங்களில் நான்கு வருடங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 12 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் நிதியுதவியை வழங்க உடன்பாடு தெரிவித்துள்ளது. நான்கு மாவட்டங்களுக்கு மேலதிகமாக அநுராதபுரம், மாத்தளை ஆகிய மாவட்டங்களையும் இரண்டாம் கட்டத்தில் இணைத்துக்கொள்ள அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 04. ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்

விவசாய இயந்திரவியல் துறையில் ஒத்துழைப்புகள் தொடர்பாக விவசாய இயந்திரவியல் விஞ்ஞானம் பற்றிய சீன அகடமிக்கும் (China Academy of Agriculture Mechanization Science - CAAMS) விவசாயத் திணைக்களத்துக்கும் இடையில் 2017ஆம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காலம் தற்போது முடிவடைந்துள்ளமையால், இருதரப்புக்கும் இடையில் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், விவசாய இயந்திர உபகரணங்கள் தொடர்பான மாதிரிக் கிராமங்களை உருவாக்கல், விசேட நிபுணத்துவங்களை பரிமாற்றிக் கொள்ளல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், மாதிரி நிலையங்களை அமைத்தல், விவசாய இயந்திரவியல் தொடர்பான கூட்டு ஆராய்ச்சிகளை நடத்துதல் போன்ற துறைகள் தொடர்பாக ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கிகாரம்.

### 05. விமான சேவைகள் ஒப்பந்தம்

இலங்கைக்கும் நெதர்லாந்துக்கும் இடையிலான இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தத்தில் கையொப்பிடுவதற்காக 2019 ஜூலை மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டிருந்தாலும், குறித்த ஒப்பந்தம் இதுவரை கையொப்பமிடப்படவில்லை.

அதனால், விமான சேவை நடவடிக்கைகள் தொடர்பாக இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் விருத்தி செய்து கொள்ளும் நோக்கில் குறித்த விமான சேவைகள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம்.

### 06. ஒப்படைத்தலுக்கான ஒப்பந்தம்

இலங்கை நீதிமன்றத்தால் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டு, தண்டனை விதிக்கப்பட்டு, சிறைப்பிடிக்கப்பட்டுள்ள திட்டவட்டமாக குறித்துரைக்கப்பட்டுள்ள வேற்று நாட்டு பிரஜை ஒருவர், குறித்த தண்டனையை அந்நபர் தனது பிரஜாவுரிமை கொண்ட நாட்டில் அனுபவிப்பதற்கு ஏற்ற வகையில் குறித்த நாட்டிடம் ஒப்படைப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் 1995 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க குற்றவாளிகளை ஒப்படைக்கும் சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது.

அதேபோல் வேற்று நாடுகளில் தண்டனை விதிக்கப்பட்ட இலங்கை பிரஜை ஒருவரை, எமது நாட்டிடம் ஒப்படைக்கும் சட்ட ஏற்பாடுகளும் குறித்த சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய செயலாற்றுவதற்காக இருதரப்புக்கும் இடையில் குற்றவாளிகளை பரிமாற்றிக் கொள்வதற்கான இலங்கை மற்றும் குறித்த நாட்டுடன் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருத்தல் அவசியமாகும். அதற்கமைய, இலங்கை அரசாங்கத்துக்கும் இத்தாலி அரசாங்கத்துக்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம்.

### 07. வாடகை வீட்டுத்திட்ட முறை

காணி மற்றும் வீடுகள் இன்மையால் குறைந்த வசதிகளுடன் வாழ்கின்ற வாடகைக் குடியிருப்பாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் 'உறுதிப்பத்திர வாடகை வீடு' எனும் பெயரில் முன்மொழிவுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக கிராமிய வீடமைப்பு, கட்டுமானங்கள் மற்றும் கட்டடப் பொருட்கள் தொழிற்றுறை ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

குறித்த கருத்திட்டத்தின் கீழ் 04 மாடிகளுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை நிர்மாணிப்பதற்கும், முதலாம் கட்டத்தின் கீழ் மாகாண மட்டத்தில் 464 வீடுகளுடன் கூடிய 09 வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. தெரிவுசெய்யப்படும் பயனாளிகளுக்கு ஆரம்பக் கொடுப்பனவை செலுத்துவதற்கான இயலுமை இன்மையால், மாதாந்தம் 15,000 ரூபாய் வாடகைப் பணமாக 31 வருடங்களுக்கு அறவிடுவதற்கும், இரண்டாவது அல்லது மூன்றாவது பரம்பரைக்கு வீட்டு உரிமையை ஒப்படைக்கக் கூடிய வகையிலும், எந்தவொரு காரணத்துக்காகவும் வீட்டை விற்பனை செய்வதற்கு இயலாத வகையிலும் பயனாளிகளுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 08. பெறுகையை வழங்கல்

அரச மருத்துவமனைகளில் சிகிச்சைகள் மற்றும் சத்திர சிகிச்சைகளுக்குத் தேவையான அறுவைத் தொற்று நீக்கியான சத்திர சிகிச்சைத் துணி (Surgical Gauze) ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக கொள்வனவு செய்ய வேண்டியது அத்தியாவசியமானதாகும். அதற்கமைய, மருத்துவ விநியோகப் பிரிவுக்கு 2022 ஆம் ஆண்டுக்கான சத்திரசிகிச்சை தொற்று நீக்கித் துணி 30 மில்லியன் மீற்றர்கள் தேவைப்படுகின்றமை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு மீற்றர் 30.55 ரூபாய் வீதம் பதிவு செய்யப்பட்ட 407 விநியோகத்தர்களிடம் குறித்த சத்திரசிகிச்சை தொற்று நீக்கித் துணியைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழு பரிந்துரைத்துள்ளது. குறித்த பரிந்துரைகளுக்கமைய குறித்த விநியோகத்தர்களுக்கு பெறுகையை வழங்குவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 09. அபாயகர விலங்குகள் கட்டளைச் சட்ட விவகாரம்

அபாயகர விலங்குகள் கட்டளைச் சட்டத்திற்கான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காக, இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்ட வரைஞரால் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் கிடைத்துள்ளது. அதற்கமைய, அபாயகர விலங்குகள் (திருத்தப்பட்ட) கட்டளைச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்துக்காகச் சமர்ப்பிப்பதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 11. திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டம்

வெளிநாட்டு விவாகரத்து பதிவு செய்தல், திருமண முடிவுறுத்தல் அல்லது சட்ட ரீதியான பிரிதலை ஏற்றுக்கொள்ளல் தொடர்பாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளதுடன், அதற்கமைய சட்ட வரைஞரால் சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதுடன், திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தில் திருமணத்தைப் பதிவு செய்வதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் உள்வாங்கப்பட வேண்டியதுடன், வெளிநாட்டு விவாகரத்து பதிவு செய்தல், திருமண முடிவுறுத்தல் அல்லது சட்ட ரீதியான பிரிதலுக்கான ஏற்பாடுகள் குறித்த கட்டளைச் சட்டத்தில் உள்வாங்கப்படாமையால், திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 13. ஒருங்கிணைப்பு நிலையத்தை நிறுவுதல்

இலங்கையில் சமுத்திர மீட்புப் பணிகளுக்கான ஒருங்கிணைப்பு நிலையத்தை நிறுவுவதற்காக 06 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய குறித்த உதவித்தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை அரசுக்கும் மற்றும் இந்திய அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும், குறித்த நிலையத்தை நிறுவுவது தொடர்பான இலங்கை அரசுக்கும் இந்தியாவின் பாரத் இலக்ரோனிக்ஸ் கம்பனிக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டள்ளது.

### 15. புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கைக்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் தனித்துவ சட்டகத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசு 300 மில்லியன் இந்திய ரூபாயை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளது. குறித்த உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக இருதரப்புக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன், குறித்த புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 16. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்

பரஸ்பர உடன்பாடுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒத்துழைப்பு வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, பருத்தித்துறை, பேசாலை, குருநகர், பலப்பிட்டிய மற்றும் ஏனைய பரஸ்பர உடன்பாடுகள் எட்டப்படும் இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக இந்திய அரசின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக் கொள்வதற்காக இருநாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

---

சென்னை

## 20க்கும் மேற்பட்ட பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்த

# ஆசாமி கைது



நபர் ஒருவர், 20 க்கும் மேற்பட்ட பெண்களை பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம், சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரபல மொடல் அழகிகள் மூவர் வழங்கிய புகாரின் அடிப்படையிலே இச்சம்பவம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

குறித்த புகாரில், 'எங்களோடு விளம்பரப் படங்களில் நடித்த நபர் ஒருவர், எங்களைக் காதலிப்பதாகக் கூறி, திருமண ஆசைகாட்டி, எங்களிடம் உடல் ரீதியாக உறவு வைத்து, பின்னர் இலட்சக்கணக்கில் எங்களிடம் பணத்தைப் பெற்று வந்துள்ளார். அவ்வாறு பணம் தர மறுத்தால், எங்களிடம் உறவு வைத்தபோது, இரகசியமாக எடுத்த படத்தைக் காட்டி, இணையதளத்தில் வெளியிட்டு விடுவேன் என்று மிரட்டுவார். இதனால் பெற்றோருக்கு தெரிந்து விடும், என்று பயந்து இவ்விடயத்தை வெளியில் சொல்லாமல் நாங்கள் மறைத்து விட்டோம். எனினும் நாங்கள் மூவரும் ஒன்றாகச் சந்தித்தபோது, எங்களை அந்நபர் ஏமாற்றியதைக் தெரிந்து கொண்டோம்.

அத்துடன், அந்நபர் எங்களைப் போல் ஏராளமான பெண்களைத் தனது காதல் வலையில் விழ வைத்து, அவர்களை ஏமாற்றி வந்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

எனவே, பெண்களைத் தனது காம இச்சைக்குப் பயன்படுத்தும் அந்த மனித மிருகத்தை, சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வாங்கிக் கொடுக்கவே இப் புகார் மனுவைக் கொடுத்துள்ளோம்' எனக் குறிப்பிடப்பட்டிருந்து.

இந்நிலையில் இது குறித்து பொலிஸார் நடத்திய தீவிர தேடுதலில், அந்த நபர் கைது செய்யப்பட்டதுடன், விசாரணையில் குறித்த மோசடி மன்னனின் பெயர் முஹமது செய்யது எனவும், அவர் பி.கொம். பட்டதாரி எனவும் அண்மைக் காலமாக விளம்பர படங்களில் நடித்து வருவதும் தெரியவந்துள்ளது. அத்துடன், கடந்த ஐந்து வருடங்களாக இவ்வாறு பெண்களை ஏமாற்றி வந்ததாகவும், இதுவரை சுமார் 20 க்கும் மேற்பட்ட பெண்களுடன் பழகி அவர்களைத் தனது காதல் வலையில் விழவைத்து, அவர்களுடன் உடல் ரீதியாக உறவு வைத்து, அதனை வீடியோவாக எடுத்து, 'இணைத்தில் வெளியிட்டு விடுவேன்' என மிரட்டி பணம் பெற்று வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த நவீன 'மன்மதனின்' காதல் வலையில் வேறு பெண்கள் சிக்கியிருக்கலாம் என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

---

சென்னை

## நயன்தாரா, விக்னேஷ் சிவனை

# கைது செய்யுமாறு புகார்



ரவுடிகளை ஊக்கப்படுத்தும் வகையில் நடிகை நயன்தாரா, இயக்குநர் விக்னேஷ் செயற்படுவதாகவும், இதனால் இருவரையும் உடனடியாகக் கைது செய்ய வேண்டும் எனவும் பொலிஸ் நிலையத்தில் புகார் ஒன்று அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை, சாலிகிராமத்தைச் சேர்ந்த கண்ணன் என்ற சமூக ஆர்வலரே இவ்வாறு புகார் அளித்துள்ளார். குறித்த புகாரில் மேலும் தெரிவிக்கப்பட்டு உள்ளதாவது:

விக்னேஷ் சிவனும் நடிகை நயன்தாராவும் 'ரவுடி பிக்சர்ஸ்' என்ற நிறுவனத்தை ஆரம்பித்துள்ளனர்.

ரவுடிகளை ஒழிக்க, தமிழகப் பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில் சமூகப் பொறுப்பின்றி, இயக்குநர் விக்னேஷ் சிவனும், நடிகை நயன்தாராவும், ரவுடிகளை ஊக்கப்படுத்தும் விதமாக, 'ரவுடி பிக்சர்ஸ்' என்ற பெயரில் பட தயாரிப்பு நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து இருப்பது, பொது மக்களை அதிர்ச்சியடைச் செய்துள்ளது.

எனவே, 'ரவுடி பிக்சர்ஸ்' படத் தயாரிப்பு நிறுவனத்தை தடை செய்வதோடு, விக்னேஷ் சிவனையும் நயன்தாராவையும் கைது செய்ய வேண்டும் எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# சத் குருவின் 'லண்டன் டூ இந்தியா'




உலக அளவில் `மண் வள பாதுகாப்பு` குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிரபல யோகா குருவான சத்குரு, 30,000 கிலோ மீற்றர் தூரம் மோட்டார் சைக்கில் பேரணியாகச் செல்லத் திட்டமிட்டுள்ளார்.

அந்தவகையில், 100 நாள்கள் பயணமாக ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளான நெதர்லாந்து, ஜேர்மனி, செக் குடியரசு உள்ளிட்ட 27 நாடுகள் வழியாக, மூன்று கண்டங்களைக் கடந்து, இந்தியாவுக்கு வருகை தரத் தீர்மானித்துள்ளார்.

இலண்டன் பாராளுமன்ற சதுக்கத்தில் நேற்று முன்தினம் (21) BMW K1600 GT வகை மோட்டார் சைக்கிளில் நூற்றுக் கணக்கான மக்கள் முன்னிலையில் தனது விழிப்புணர்வுப் பேரணியை அவர் தொடங்கினார்.

---

தமிழகம்

## இரவு மது விருந்தில் 500 பேர் சிக்கினர்

**மாணவர்களும் இளம்பெண்களும் அடங்குகின்றனர்**

தமிழகத்தில் அண்மைக்காலமாக கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் குறைந்து வரும் நிலையில், சென்னையை அடுத்த கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள விடுதிகளில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு நேரங்களில் மது விருந்துகள் அதிகளவில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இந்நிலையில், பனையூர் அருகே உள்ள ஒரு சொகுசு விடுதியில் கடந்த 20 ஆம் திகதி இரவு மதுவிருந்து நடைபெறுவதாகவும், அதில் யுவதிகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் 500 பேர் மதுபோதையில் நடனமாடி வருவதாகவும் தாம்பரம் பொலிஸ் நிலையத்திற்கு இரகசிய தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், குறித்த மது விருந்தில் பங்கேற்ற அனைவரையும் சுற்றி வளைத்து பிடித்தனர். அவர்களில் 50க்கும் மேற்பட்ட பெண்கள் இருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

தமிழகம்

## தமிழகத்தில் முதன்முறையாக...



தமிழக சட்டசபை வரலாற்றிலேயே முதல்முறையாக துபாஷி பொறுப்புக்கு பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

1990ஆம் ஆண்டு, சட்டசபையில் உதவியாளராக பணியில் சேர்ந்த ராஜலட்சுமி (60) என்பவர், எதிர்வரும் மே மாதத்துடன் ஓய்வு பெற உள்ள நிலையில், துபாஷியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

துபாஷியாக உள்ளவர் சட்டசபைக்கு சபாநாயகர் செல்லும் போது, அவர் முன்னே செல்லவும், சபாநாயகர் அவையில் இருக்கும்போது அவைக்கு வெளியில் காத்திருக்கவும், மீண்டும் சபாநாயகர் அவர் அறைக்குச் செல்லும்போது உடன் செல்லவும் வேண்டும். இப்பொறுப்பில் இதுவரை ஆண்களே நியமிக்கப்பட்டிருந்த நிலையில், முதன்முறையாக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உக்ரேன்

2,000 க்கும் மேற்பட்ட சிறுவர்களை

# கடத்திய ரஷ்யா?

உக்ரேனில் தாக்குதல் நடத்தி வரும் ரஷ்ய இராணுவம், பொது மக்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருப்பதாக உக்ரேன் குற்றம்சாட்டி வந்த நிலையில், தற்போது 2,000 க்கும் மேற்பட்ட சிறுவர்களை ரஷ்யா கடத்திச் சென்றுள்ளதாக, உக்ரேன் அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.



இது குறித்து வெளியான செய்திக் குறிப்பில் 'ரஷ்யாவின் படையெடுப்பில் சிறுவர்கள் குறி வைக்கப்பட்டுக் கடத்தப்படுகின்றனர். குறிப்பாக, ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள டான்பாஸ் பகுதியில் இருந்து இதுவரை 2,389 சிறுவர்கள் ரஷ்யாவுக்கு சட்ட விரோதமாக நாடு கடத்தப்பட்டுள்ளனர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச்செய்தியானது உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யா

## பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராமுக்கு தடை



ரஷ்ய அரசானது பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகிய சமூக வலைத் தளங்களுக்குத் தடை விதித்துள்ளது.

ரஷ்யாவில் இம்மாதத் தொடக்கத்திலிருந்தே பேஸ்புக், டுவிட்டர் ஆகிய சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த வாரம் இன்ஸ்டாகிராமும் முடக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்து சமூக வலைத்தளங்களுக்கு முழுமையாகத் தடை விதிக்கப்படவேண்டும் என வழக்கறிஞர்கள் சிலர் கோரிக்கை விடுத்ததை அடுத்து, குறித்த தடை அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் வட்ஸ் அப் செயலிக்கு மாத்திரம் தடை விதிக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா

## விளாடிமிர் புடின் மீது கொலை முயற்சி?

நேட்டோ அமைப்பில் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்நாட்டின் மீது ரஷ்யா 27 ஆவது நாளாகத் தொடர்ந்து தாக்குதல் நடத்திவருகின்றது.

அதேசமயம், உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக, அந்நாட்டின் மீது அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகள் அடுக்கடுக்கான பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன.

மேலும், ரஷ்யாவில் உள்ள 'அலிகார்க்ஸ்' என்ற குழுமத்தின் சொத்துகள் பல நாடுகளில் முடக்கப்பட்டிருக்கின்றன. 'அலிகார்க்ஸ்' ரஷ்ய அரசாங்கத்தை மறைமுகமாகக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் அரசாங்க முடிவுகளை தீர்மானிக்கக் கூடிய அதிகாரமும் பெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், 'அலிகார்க்ஸ்' தற்போது ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் ஆட்சியை கவிழ்க்க முயற்சி மேற்கொண்டிருப்பதாக உக்ரேனின் உளவுத்துறை இயக்குநரான கைரிலோவ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "புட்டின் உக்ரேனின் மீது படையெடுத்ததன் விளைவாக, நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள 'அலிகார்க்ஸ்', அவரின் ஆட்சியை கவிழ்க்க தீர்மானித்துள்ளது. அதன்படி, புட்டினுக்கு வீதிவிபத்தை உண்டாக்கியோ, விஷம் கொடுத்தோ, நோயை உண்டாக்கியோ, விரைவாக அவரின் ஆட்சியை கவிழ்ப்பதற்கு முயன்று வருகின்றனது" எனத் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா

## அவுஸ்திரேலியாவின் அதிரடி அறிவிப்பு

உக்ரேன் மீது ரஷ்யா தொடுத்துள்ள தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அவுஸ்திரேலியா அதிரடி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

உக்ரேன் மீது ரஷ்யப் படைகள் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டு வரும் நிலையில், அதற்குப் பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

குறிப்பாக, அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் ரஷ்யா மீது பல பொருளாதார தடைகளையும் விதித்து வருகின்றன.



இந்நிலையில் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அலுமினியம், பொக்ஸைட் போன்ற தாதுக்களை அவுஸ்திரேலியா தடை செய்வதாக அறிவித்துள்ளது .

மேலும், இது குறித்து அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் 'ரஷ்யா, தனது அலுமினிய தேவைகளில் 20 சதவீதத்துக்கும் மேல், அவுஸ்திரேலியாவையே நம்பியுள்ளது.

மேலும், ரஷ்ய அலுமினிய நிறுவனமான ருசல் மற்றும் சுரங்க நிறுவனமான ரியோ டின்டோ ஆகியவற்றுக்கும் குயின்ஸ்லாந்து அலுமினிய நிறுவனத்திற்கும் இடையேயான ஒப்பந்தமானது, கடந்த சில நாள்களாக ஏற்பட்ட பதட்டநிலைமை காரணமாக தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உக்ரேன்


## உக்ரேன் மருத்துவரிடம் இன்ஸ்டாகிராமை ஒப்படைந்த பெக்காம்

பிரித்தானியாவைச் சேர்ந்த பிரபல முன்னாள் கால்பந்து வீரரான டேவிட் பெக்காம், தனது இன்ஸ்டாகிராம் கணக்கை, உக்ரேன் மருத்துவர் ஒருவருக்கு வழங்கியுள்ளார்.

உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான போரானது 27ஆவது நாளாக நீடித்து வருகிறது.

இப்போரால், உக்ரேனில் உள்ள பாடசாலைகள், வைத்தியசாலைகள் எனப் பல முக்கிய இடங்கள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

இந்நிலையில் உக்ரேனில் உள்ள மகப்பேறு மருத்துவமனையில் பணியாற்றி வரும் இரினா என்ற பெண் மருத்துவரிடம், பிரித்தானியாவின் முன்னாள் கால்பந்து வீரர் டேவிட் பெக்கொம், தனது இன்ஸ்டராகிராம் கணக்கை




வழங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள காணொளியில் "நான், எனது இன்ஸ்டாகிராம் கணக்கை, இரினாவிடம் வழங்குகிறேன். இவர், கார்கிவ் மாகாணத்தில் உள்ள மண்டல மகப்பேறு மையத்தின் தலைவராக உள்ளார். உக்ரேனில் உள்ள கர்ப்பிணி பெண்கள், குழந்தை பெற்றுக்கொள்ள உதவியாக இருக்கிறார். உக்ரேனில் உயிர்களைக் காப்பாற்ற இரினா மற்றும் சுகாதாரா ஊழியர்கள் செய்து வரும் அற்புதமாக பணிகளை மேலும் வெளிப்படுத்த எனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரி உதவியாக இருக்கும்" எனத் தெரிவித்துள்ளார்.

இன்ஸ்டாகிராமில் டேவிட் பெக்காமை 71.7 இலட்சம் பேர் பின் தொடர்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தானுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில்

# 391 ஓட்டங்களை பெற்ற அவுஸ்திரேலியா

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டின் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 391 ஓட்டங்களை அவுஸ்திரேலியா பெற்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், லாகூரில் நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் பற் கமின்ஸ், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்திருந்தார்.

துடுப்பாட்டத்தில், உஸ்மான் கவாஜா 91, கமரொான் கிறீன் 79, அலெக்ஸ் காரி 67, ஸ்டீவ் ஸ்மித் 59 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், நசீம் ஷா, ஷகீன் ஷா அஃப்ரிடி ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு, சஜிட் கான், நௌமன் அலி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின்

## பி பிரிவு கழகங்களுக்கு இடையிலான போட்டிகள் ஆரம்பித்தன



நூருல் ஹுதா உமர்

அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட லீக்கால் நடத்தப்படும் பி பிரிவு கழகங்களுக்கிடையில் லீக் அடிப்படையிலான போட்டிகளின் ஆரம்பப் போட்டி, இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பிரதிப் பொதுச் செயலாளரும், அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் பொதுச் செயலாளரும், கல்முனை மாநகர சபை உறுப்பினருமான எம்.ஐ.எம். அப்துல் மனாப் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில்,அகில இலங்கை மக்கள் காங்கிரசின் பிரதி தேசிய அமைப்பாளரும், நிந்தவூர் பிரதேச சபை தவிசாளருமான எம்.ஏ.எம். அஸ்ரப் தாஹிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மருதமுனை மருதம் அணிக்கும் மருதமுனை க்ரீன் மெக்ஸ் அணிக்குமிடையிலான முதலாவது போட்டி பிரதம அதிதியால் கைலாகு செய்யப்பட்டு நினைவுப் புகைப்படம் எடுக்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் மருதமுனை மருதம் அணி 7-0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

## விசாகா பாலர் பாடசாலை விளையாட்டு நாள்

விசாகா பாலர் பாடசாலையில் வருடாந்த விளையாட்டு நாளானது, பாடசாலை மைதானத்தில் நாளை மறுதினம் காலை இடம்பெறவுள்ளது.

இரண்டரை வயதிலிருந்து ஆறு வயதுடைய குழுவிலிருந்து 250 பேரளவான சிறுவர்கள், வெவ்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர். மேல் வகுப்பினர் வர்ணமயமான ட்ரில் நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளனர்.

பிரதம அதிதியாக, தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் 2019ஆம் ஆண்டு 4 x 100 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற சதீப ஹெண்டர்சன் பங்கேற்கவுள்ளார்.

தவிர, பாடசாலையின் தலைவர் திஸ்ஸ கூரேயும், பணிப்பாளர்சபையின் உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். இந்நிகழ்வை, அதிபர் திருமதி கிறிஷாந்தி லெவ்கே, முழுப் பணியாளர்களின் உதவியுடன் ஒழுங்கமைத்துள்ளார்.



மர்ஹூம் கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்த கிண்ணத் தொடரின்

## இறுதிப்போட்டியில் புத்தளம் லிவர்பூல், நாகவில்லு எருக்கலம்பிட்டி

எம்.யூ.எம். சனூண்

புத்தளம் நகர சபையின் ஏற்பாட்டில் புத்தளம் கால்ப்பந்தாட்ட லீக்கின் ஒத்துழைப்புடன் புத்தளத்தில் நடாத்தப்பட்டு வந்த கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்ப்பந்தாட்டத் தொடரின் இரண்டு அரையிறுதிப் போட்டிகள் அண்மையில் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றன.

இடம்பெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் புத்தளம் அல் அஷ்ரக் அணியும், லிவர்பூல் அணியும் பலப்பரீட்சை நடாத்தின. போட்டி ஆரம்பித்து மூன்றாவது நிமிடத்தில் அல் அஷ்ரக் அணி வீரர் என்.எம். நுஸ்கி தனது அணிக்காக முதலாவது கோலைப் பதிவு செய்தார்.

இடைவேளைக்கு பின்னர் போட்டியின் இறுதித் தறுவாயில் 74ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணி வீரர் எம்.எச்.எம். முஸ்தாக் தனது அணிக்காக முதலாவது கோலைப் போட்டதுடன் போட்டி மேலும் விறு விறுப்பாகியது.

போட்டி சம நிலையில் நிறைவடையலாம் என எதிர்பார்க்கப்பட்ட வேளை 79ஆவது நிமிடத்தில் லிவர்பூலுக்கு கிடைக்கப்பெற்ற தண்ட உதையை லிவர்பூலின் அதி வேக உதை வீரர் எம். முஸக்கீர் கோலாக்கியதன் மூலம் 2-1 எனும் கோல் வித்தியாசத்தில் லிவர்பூல் அணி தனது வெற்றியை உறுதிப்படுத்தி இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

போட்டியின் சிறந்த வீரராக லிவர்பூல் அணியின் எம்.எச். எம். முஸ்தாக் தெரிவானார்.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நாகவில்லு எருக்கலம்பிட்டி அணியும் தில்லையடி நியூ பிரண்ட்ஸ் அணியும் மோதின. போட்டி ஆரம்பித்து 18 வது நிமிடத்தில் நியூ பிரண்ட்ஸ் அணி வீரர் எம். முபாரிஸ் தனது அணிக்காக கோலைச் செலுத்தினார்.

இடைவேளைக்கு பின்னர் போட்டியின் இறுதித் தறுவாயில் நாகவில்லு எருக்கலம்பிட்டி அணியினர் தொடர்ந்து இரண்டு கோல்களை புகுத்தியதன் மூலம் 2-1 என்ற கோல் கணக்கில் நாகவில்லு எருக்கலம்பிட்டி அணி வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது. நாகவில்லு எருக்கலம்பிட்டி அணிக்காக எப்.எம்.பஸாம், எம்.பாசில் ஆகியோர் கோல்களைச் செலுத்தியதோடு, போட்டியிம்நாயகனாக அவ்வணியின் கோல் காப்பாளர் எம்.எச்.எம்.அபாஸ் தெரிவானார்.

தொடரின் பரபரப்பான இறுதிப் போட்டி, புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டால் புதன்கிழமை, 23 மார்ச் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.